**கவனிக்க.**- *2016.02.05 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1954 - 2016 පෙබරවාරි මස 12 වැනි සිකුරාදා - 2016.02.12**

*1954 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 216 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 222 |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, மாச்சு மாதம் 4 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய முஸ்லிம் விவாகப் பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, பங்குனி மாதம் 14 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, சனவரி 22.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | பாணந்துறை | எழுவிள பிரதேசத்தின் களுத்துறை மற்றும் பாணந்துறை பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை |

2-267

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - அநுராதபுரம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, பங்குனி மாதம் 14 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, சனவரி 21.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | நுவரகம்பலாத்த மத்திய | நுவரகம் கோறளை வடக்குப் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் நுவரகம், பலாத்த பிரிவில் விவாகப் (பொது/ கண்டிய) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம் |

2-268

---

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

### நீதி அமைச்சின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் I ஆம் தரத்தின் சிரேட்ட உதவிச் செயலாளர் (சட்டம்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2016

இவ்வமைச்சின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் I ஆம் தரத்தின் சிரேட்ட உதவிச் செயலாளர் (சட்டம்) பதவிகளில் நிலவுகின்ற 2 வெற்றிடங்களுக்காக தகுதியுடையவர்களைத் தெரிவுசெய்துகொள்வதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பின் பேரில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரிப் படிவத்திற்கமைவாக தயார்செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கீழே குறிப்பிடப்படும் திகதி அல்லது அதற்கு முன்னராக "செயலாளர், நீதி அமைச்சு, மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி, கொழும்பு 12" என்னும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவு அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது மேல் மூலையில் "நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் I ஆம் தரத்தின் சிரேட்ட உதவிச் செயலாளர் (சட்டம்) பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2016.04.18 ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பமொன்று அல்லது அது சம்பந்தப்பட்ட கடிதமொன்று அஞ்சலில் காணாமற் போனதாக அல்லது தாமதமானதாக செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களைத் தாமதம் செய்வதனால் ஏற்படுகின்ற நட்டங்களை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

1. **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.- அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் மூலம் நடாத்தப்படுகின்ற அமைப்பு முறையான நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் பெற்றுக்கொடுக்கப்படுகின்ற புள்ளிகளின் மீது தெரிவுசெய்யப்படுவர்.

நியமிக்கப்படுகின்ற எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின்படி தீர்மானிக்கப்படுகின்றது.

2. **சேவை நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள்/தபுதாரர் அநாதைகள் ஓய்வூதிய சம்பள நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் செலுத்தல் வேண்டும்.

(ii) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும் திணைக்கள பிற கட்டளைகளுக்கும் இந்நியமனம் கட்டுப்படும்.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு 6/2006 ஆம் இலக்க பொது நிருவாக சம்பளச் சுற்றறிக்கையின்படி எஸ்எல்-1-2006, ரூபா 22,935-10X645-8X790-17X1,050-ரூ. 53,555 (மாதாந்த) சம்பள அளவுத் திட்டமொன்று உரித்தாவதுடன், அதன் 20 ஆம் சம்பளப் படிநிலையில் (36,755 ரூபா) வைத்து சம்பளம் செலுத்தப்படும்.

4. **தகைமைகள் :**

(i) அரசாங்க அமைச்சொன்றில் அல்லது திணைக்களமொன்றில் நிறைவேற்று வகுதியின் சட்ட அலுவலர் பதவியொன்றின் I ஆம் தரத்தின் அலுவலர் ஒருவராக இருத்தல்.

(ii) அக்காலத்துள் ஒழுக்காற்று தண்டனையொன்றுக்கு உட்படாதிருத்தல்.

(iii) நன்றாக ஆங்கில மொழியைக் கையாளக்கூடியவராக இருத்தல்.

(iv) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடவடிக்கை முறையின்படி இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற நாளுக்கு கிட்டிய 5 வருடங்களுக்குள் திருப்திகரமான அல்லது அதற்கு உயர் மட்டத்திலான செயலாற்றுகையைக் காட்டப்பட்டிருக்க வேண்டுமென்பதுடன், உரிய 5 சம்பள உயர்வுகளை உழைத்துப் பெற்றுக்கொண்டிருத்தல் வேண்டும்.

5. **உடற் தகைமைகள்**.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியில் தகுதியுடையவராக இருக்க வேண்டும்.

6. **பிற தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும் ;
(ii) விண்ணப்பதாரர்கள் சிறந்த நல்லொழுக்கம் உடையவர்களாக இருத்தல் வேண்டும் ;
(iii) விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற இறுதித் திகதிக்கு பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காகத் தேவைப்படுகின்ற சகல தகைமைகளையும் பூர்த்திசெய்ய வேண்டுமென விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற அறிவித்தலில்/வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்படுகின்ற இறுதித் திகதிக்கு அத்தகைமைகளை சகல விதத்திலும் பூர்த்திசெய்திருக்க வேண்டும்.

7. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை**.- அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் மூலம் புள்ளிகள் வழங்கப்படுகின்றன.

8. **நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்படும் முறை :**

| புள்ளிகள் வழங்கப்படும் துறைகள் | புள்ளிகள் | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|
| 1. **மேலதிக கல்வித் தகைமைகள் :** | | 25 |
| (i) சட்டத்துறையின் கலாநிதிப் பட்டம் | 25 | |
| (ii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது இலங்கைச் சட்டக் கல்லூரியால் வழங்கப்படுகின்ற சட்டப் பட்டப்பின் படிப்பு (LLM) பட்டத்தில்- | 20 | |
| (iii) பாடநெறியின் கால எல்லை ஓராண்டுக்குக் குறையாத சட்டத் துறையின் பட்டப்பின் டிப்ளோமா | 10 | |
| (iv) பாடநெறியின் கால எல்லை 6 மாதங்களுக்குக் குறையாத சட்டத் துறையின் பட்டப்பின் டிப்ளோமா | 05 | |

| புள்ளிகள் வழங்கப்படும் துறைகள் | புள்ளிகள் | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|
| 2. **அனுபவம் :** | | 30 |
| (i) அரசாங்க அமைச்சொன்றில் அல்லது திணைக்களமொன்றில் நிறைவேற்று வகுதியின் சட்ட அலுவலர் பதவியொன்றில் I ஆம் தரத்தின் அலுவலர் ஒருவராக உயிர்ப்பான மற்றும் திருப்திகரமான தொழில் அனுபவம் (ஆண்டொன்றுக்கு 3 புள்ளிகள் வீதம் அதிகூடிய புள்ளிகள் 30 ஆகும்.) | ஆண்டொன்றுக்கு 03 புள்ளிகள் வீதம் | |
| 3. **ஆங்கில மொழித் தேர்ச்சி :** | | 20 |
| (i) பட்டம், பட்டப் பின்படிப்பு, சட்டத்துறைக் கற்கைநெறி சட்டப்பின் கற்கைநெறி ஆங்கில மொழி மூலத்தில் கற்றிருத்தல் (சம்பந்தப்பட்ட சகல பரீட்சை வினாத்தாள்களுக்கும் ஆங்கில மொழியில் விடையளித்திருத்தல் வேண்டும்.) | 20 | |
| (ii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட ஆங்கில மொழி பற்றிய டிப்ளோமா (கற்கைநெறியின் காலப்பகுதி 6 மாதங்களுக்குக் குறையாத) | 15 | |
| (iii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட ஆங்கில மொழி பற்றிய தராதரப்பத்திர கற்கைநெறி (கற்கைநெறியின் காலப்பகுதி 3 மாதங்களுக்குக் குறையாத) | 05 | |
| 4. **நேர்முகப் பரீட்சையில் காட்டப்படுகின்ற திறமை :** | | 25 |
| (i) தொலைத்தொடர்புத் திறமை | 10 | |
| (ii) முகாமைத்துவத் திறமை | 05 | |
| (iii) தலைமைத்துவத் திறமை | 05 | |
| (iv) ஆளுமை | 05 | |
| 5. மொத்தம் | | 100 |

9. (i) விண்ணப்பம் 22x29 செ. மீ. அளவிலான A4 தாளில் தயார்செய்ய வேண்டுமென்பதுடன் 1 தொடக்கம் 12 வரையிலான தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும், 13 தொடக்கம் முடிவடையும் வரையிலான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்குகின்றவாறு தயார் செய்ய வேண்டும். அதற்கான தகவல்களை தனது கையெழுத்தினாலேயே தெளிவாக எழுதப்பட வேண்டும். சகல விதத்திலும் சரியாகப் பூர்த்தியாகாத அடிப்படைத் தகைமைகள் இல்லாத உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற மற்றும் மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கமைவாக இல்லாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகவிருக்கும். மேலும் பூர்த்திசெய்யப்படுகின்ற விண்ணப்பம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக உள்ளதா என விண்ணப்பதாரர் பரிசீலனை செய்து பார்க்க வேண்டுமெனவும் அவ்வாறு இல்லாவிடின் விண்ணப்பம் நிராகரிக்கப்படுமெனவும் மேலும் அறிவித்துக்கொள்கிறேன். விண்ணப்பங்களை இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயார் செய்யவும். விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்படமாட்டாது.

**கவனிக்க :**

(அ) விண்ணப்பத்துடன் எந்தவோர் ஆவணமோ அல்லது அதன் பிரதியொன்றோ இணைத்தலாகாது.

(ஆ) வேண்டப்படும்போது ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற விண்ணப்பகாரர்களின் விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப் பட மாட்டாது.

(இ) விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட அமைச்சுச் செயலாளர்/ திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்ப வேண்டும்.

10. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கை முறை விதிகள் காலத்துக்குக்காலம் அரசாங்க சேவை தொடர்பில் வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் நீதி அமைச்சின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் I ஆம் தரத்திற்கான சேவைப்பிரமாணம் மற்றும் அதற்குச் செய்யப்பட்டுள்ள திருத்தங்களின் நிபந்தனைகள் இப்பதவிக்காக ஏற்புடையதாகிறது.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

--------,
செயலாளர்,
நீதி அமைச்சு.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
2016, சனவரி 27.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

**நீதி அமைச்சின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் I ஆம் தரத்தின்**
**சிரேட்ட உதவிச் செயலாளர் (சட்டம்) பதவி**

இல. ..............................................
(அலுவலக உபயோகத்துக்காக)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

(ஆ) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

2. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

3. நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

4. தொலைபேசி இல. :----.

5. தேசிய ஆள் அடையாள அட்டை இல. : | | | | | | | | | | |

6. ஆணா/பெண்ணா என்பது :----.

7. பிறந்த திகதி :

ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

8. விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது :----.

9. தற்போது சேவை செய்யும் அமைச்சு/திணைக்களம் :----.

10. தற்போது வகிக்கும் பதவி :----.

11. அரசாங்க அமைச்சொன்றில்/அல்லது திணைக்களமொன்றில்-

(அ) நிறைவேற்று சேவைகள் வகுதியின் பதவியொன்றில் நியமனம் பெற்ற திகதி :----.

(ஆ) நிறைவேற்று சேவைகள் வகுதியின் I ஆம் தரத்தின் பதவியொன்றில் நியமனம் பெற்ற திகதி :----.

12. விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலின் 9 ஆம் பந்தியின்படி தகைமைகள் :

(i) :----.
(ii) :----.
(iii) :----.
(iv) :----.
(v) :----.

13. மொழித் தேர்ச்சி (சம்பந்தப்பட்ட கூட்டினுள் ✓ அடையாளத்தை இடுக.)

| | மிகவும் நன்று | நன்று | சாதாரணம் | மிகக் குறைவு |
|---|---|---|---|---|
| சிங்களம் | | | | |
| தமிழ் | | | | |
| ஆங்கிலம் | | | | |

**விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

.................................................... ஆகிய நான் மேலே குறிப்பிட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவை எனவும், உண்மையானவை எனவும் தெரிவித்துக்கொள்கிறேன். நான் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டோ, வினைத் திறமையின்மையின் காரணமாக சேவையிலிருந்து ஓய்வுபெறச் செய்யப்பட்டோ இல்லை எனவும், பதவியை கைவிட்டுச் சென்ற ஒருவராகக் கருதப்படவில்லை எனவும் உறுதி கூறுகிறேன். இதில் அடங்கியுள்ள தகவல்கள் பொய்யானதென அல்லது பிழையானதென நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து நான் தகுதியற்றவராக ஆக்கப்படுவேன் என்றும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் தெரியவருமிடத்து நட்டஈடு எதுவுமின்றி பதவி நீக்கம் செய்யப்படுவேன் என்றும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களுக்காக அமைச்சின் செயலாளரின்/திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

திரு./திருமதி/செல்வி ..................................................................................... தற்போது இவ்வமைச்சில்/திணைக்களத்தில் .................... ................................................. ஆக சேவை செய்கிறார் என்றும், அவரால் மேலே 9, 10, 11 மூலம் தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்றும், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு அல்லது ஒழுக்காற்று நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன/இல்லை என்றும், அவர் அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடவடிக்கை முறையின்படி கிட்டிய 5 வருட காலத்துள் திருப்திகரமான அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்திலான செயலாற்றுகையைக் காட்டியுள்ளார்/இல்லை என்றும் உரிய 5 சம்பள உயர்வுகளை உழைத்துப் பெற்றுக் கொண்டுள்ளார்/இல்லை என்றும் சம்பளமற்ற அல்லது அரைச் சம்பள விடுமுறைகளைப் பெற்றுள்ளார்/இல்லை என்றும் அவரது கடமை, வருகை, நடத்தை, செயலாற்றுகை திருப்திகரமாக உள்ளது/இல்லை என்றும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

திரு./திருமதி/செல்வி ....................................................... இப்பதவிக்கு தெரிவுசெய்யப்படுமாயின், அவரை பின்னுரிமையாளருடன்/இன்றி அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்றும் அறிவித்துக்கொள்கிறேன்.

----,
அமைச்சின் செயலாளரின்/திணைக்களத்
தலைவரின் கையொப்பமும் அலுவலக முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
அமைச்சு/திணைக்களம் :----.
திகதி :----.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**நிதி அமைச்சு**

இலங்கை சுங்கத் திணைக்களம்

**இலங்கை சுங்கத் திணைக்களத்தின் சுங்க உதவி அத்தியட்சகர் தரம் II பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2016**

இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் சுங்க உதவி அத்தியட்சகர் தரம் II ஆம் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சையொன்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2016, மே மாதத்தில் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படவுள்ளது. பரீட்சை நடைபெறும் திகதியானது பத்திரிகைகள் மூலம் உரிய காலத்தில் அறிவிக்கப்படும். இப்பரீட்சையினைப் பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகம் கொண்டுள்ளார்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள ஆண் மற்றும் பெண் இருபாலாரிடமிருந்தும் இப்பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **தகைமைகள் :**

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தாம்–

(அ) இலங்கைப் பிரசையாகவும் ;

(ஆ) மிகச் சிறந்த ஒழுக்கமுடையவராகவும் ;

(இ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 22 வயதுக்கு குறையாதவராகவும் 28 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதற்கமைய வயது தொடர்பான தகைமையைப் பூர்த்திசெய்யப்படுவது விண்ணப்பதாரி 1994.03.14 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பிறந்திருப்பதுடன் மற்றும் 1988.03.14 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.)

**குறிப்பு**.– ஏதேனும் சமயக் கிளையில் மதகுரு அந்தஸ்திலுள்ள எந்தவொரு நபருக்கும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

(ii) ***உடற் தகைமைகள்***.– ஆண்களின் விடயத்தில் அவர்களுடைய உயரமானது 5 அடி 5 அங்குலத்துக்கு குறையாமலும் மார்புச் சுற்றளவு (விரிவடைந்த நிலையில்) 33 அங்குலத்துக்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.

பெண்களின் விடயத்தில் அவர்களுடைய உயரமானது 5 அடி 3 அங்குலத்துக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

(iii) ***கல்வித் தகைமைகள்***.– விண்ணப்பதாரிகள் பின்வரும் கல்வித் தகைமைகளை உடையவர்களாக இருத்தல் வேண்டும் :–

(அ) அங்கீகரிக்கப்பட்டதொரு பல்கலைக்கழகத்தில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் ; அத்துடன்

(ஆ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் ஆங்கில மொழியில் ஆகக்குறைந்தது திறமைச் சித்தியினைப் பெற்றிருத்தல் வேண்டும். (விருப்பத்துக்குரிய பாடமான ஆங்கில மொழியானது கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது) ; அல்லது

(இ) கல்விப் பொதுத் தராதர (உயர் தரம்) பரீட்சையில் ஆங்கில மொழியில் சாதாரண சித்தியினை (ஆகக்குறைந்தது) பெற்றிருத்தல் வேண்டும்.

***குறிப்பு***.– பட்டப் பரீட்சையொன்றின் பெறுபேறுக்காக காத்திருக்கும் எந்தவொருவரும் இப்பரீட்சைக்குத் தோற்ற தகுதியுடையவராக மாட்டார். எனினும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டப் பரீட்சையில் சித்தியடைந்த ஆளொருவர் அப்பட்டப் பரீட்சையில் சித்திபெற்றுள்ளார் என்ற விடயம் அடங்கிய உத்தியோகபூர்வ கடிதமொன்றை பல்கலைக்கழக பதிவாளரிடமிருந்து பெற்று அதைச் சமர்ப்பிக்குமிடத்து அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படலாம்.

3. **சேவை நிபந்தனைகள் :**

(i) ***வேதனம்***.– இப்பதவிக்கான திரட்டிய மாதாந்த வேதன அளவுத்திட்டம் வருமாறு.–

ரூபா 16,720 - 320 x 10 - 365 x 11 - 450 x 15 = ரூபா 30,685 (பொது நிருவாக சுற்றறிக்கை இல. 6/2006 (IV) - எம். என் 5-2006A)

(ii) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்துக்குரியதுமாகு மென்பதுடன் விதவைகள், தபுதாரர்கள்/அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துதலும் வேண்டும்.

(iii) சித்திபெற்று தெரிவாகும் பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டுகாலப் பகுதிக்கு தகுதிகாண் நிலையில் வைக்கப்பட்டு நியமனம் வழங்கப்படும்.

(iv) நியமனம் பெறுபவர்கள் நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றக் கூடிய உடல் தகுதியினை உடையவர்களா இல்லையா என்பதை பரீட்சிப்பதற்காக அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரினால் நடாத்தப்படும் மருத்துவ பரீட்சைக்கு உட்படுதல் வேண்டும்.

(v) நியமனம் பெறுபவர்கள் இத்தீவின் எப்பாகத்திலும் இரவிலும் பகலிலும் சேவையாற்றுவதற்கு பிணிக்கப்பட்டுள்ளார்கள்.

(vi) அரசாங்க வர்த்தமானி அறிவித்தலில் பகுதி I : தொகுதி (IIஅ) ஆம் பிரிவின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளுக்கு கவனம் கோரப்படுகின்றது.

4. **பரீட்சைத் திட்டம்**.– ஆட்சேர்ப்புக்கான பரீட்சைத்திட்டம் வருமாறு :–

| | புள்ளிகள் |
|---|---|
| (i) உளச்சார்புப் பரீட்சை (1 மணித்தியாலம்) | 100 |
| (ii) ஆங்கில மொழி (1 1/2 மணித்தியாலங்கள்) | 100 |
| மொத்தம் | 200 |

***உளச்சார்புப் பரீட்சை வினாத்தாள்***.– இவ்வினாத்தாளானது விண்ணப்பதாரரது மொழித் தேர்ச்சி, கணித அறிவு, தர்க்க ரீதியான அறிவினை அளவிடும்வகையில் தயாரிக்கப்பட்டதாக இருக்கும். (இவ்வினாத்தாளானது 50 பல்தேர்வு வினாக்கள் மற்றும் குறுகிய விடையளிக்கும் வகையிலான வினாக்களைக் கொண்டிருக்கும்). சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

***ஆங்கில மொழி வினாத்தாள்***.– விண்ணப்பதாரிகளது வாசிப்பு, எழுத்து, கிரகித்தல் மற்றும் தொடர்பாடல் திறன்களை பரிசோதிப்பதற்காக தயாரிக்கப்பட்டதாக இருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**குறிப்பு**.- இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும். இந்த அறிவித்தலின் பந்தி 2 (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைப் பரீட்சையில் சித்திபெற்ற மொழியிலேயோ அல்லது அரச கரும மொழியொன்றிலேயோ விண்ணப்பதாரி இப்பரீட்சைக்கு தோற்ற வேண்டும். (பரீட்சார்த்தி விண்ணப்பத்தில் கொடுத்த பரீட்சை மொழியை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(i) தெளிவற்ற எழுத்துக்கும் எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும்.

(ii) தகைமையுடைய விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பிவைக்கப்படும். ஆனால் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது பரீட்சைக்குத் தோற்றுவதற்கான எல்லாவித தகைமைகளையும் பெற்றுள்ளார் எனக் கருதுதல் ஆகாது.

(iii) ***மதிப்பிடுகை***.- போட்டிப் பரீட்சையின் ஒவ்வொரு வினாப் பத்திரத்திலும் 60% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளைத் தெரிவுசெய்து அவர்களது மொத்த புள்ளிகளுக்கு இணங்க இறங்குவரிசையில் பட்டியலொன்று தயாரிக்கப்படும். தற்போதுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக் கிணங்க மொத்தத்தில் இறங்குவரிசையில் முதற்கட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். முதற்கட்ட நேர்முகப் பரீட்சையில் விளையாட்டுத் திறமைகளுக்காக ஆகக்கூடியது 10 புள்ளிகள் வழங்கப்படும். அதன் பின்னர் பொது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இதன்போது எவ்வித புள்ளிகளும் வழங்கப்பட மாட்டாது. பரீட்சைகளில் பெறப்பட்ட மொத்தப் புள்ளிகளும் மற்றும் முதற்கட்ட நேர்முகப் பரீட்சையில் வழங்கப்பட்ட புள்ளிகளும் மாத்திரம் கவனத்திற்கொள்ளப்படும்.

*முதற்கட்ட நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் நடைமுறை :*

*வலய மட்டத்தில் தனிப்பட்ட விளையாட்டுக்கான புள்ளிகள்.*- முதலாமிடத்திற்கு 3 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 2 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 1 புள்ளி.

*மாவட்ட மட்டத்தில் தனிப்பட்ட விளையாட்டுக்கான புள்ளிகள்.*- முதலாமிடத்திற்கு 4 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 3 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 2 புள்ளிகள்.

*தேசிய மட்டத்தில் தனிப்பட்ட விளையாட்டுக்கான புள்ளிகள்.*- முதலாமிடத்திற்கு 5 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 4 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 3 புள்ளிகள்.

*வலய மட்டத்தில் குழு விளையாட்டுக்கான புள்ளிகள்.*- முதலாமிடத்திற்கு 3 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 2 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 1 புள்ளி.

*மாவட்ட மட்டத்தில் குழு விளையாட்டுக்கான புள்ளிகள்.*- முதலாமிடத்திற்கு 4 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 3 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 2 புள்ளிகள்.

*தேசிய மட்டத்தில் குழு விளையாட்டுக்கான புள்ளிகள்.*- முதலாமிடத்திற்கு 5 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 4 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 3 புள்ளிகள்.

5. **தெரிவுமுறை அடிப்படை அல்லது தேர்ந்தெடுக்கும் முறை**.- எழுத்துப் பரீட்சையிலும் நேர்முகப் பரீட்சையிலும் சித்தியடைந்த பரீட்சார்த்திகளுக்கு நியமனம் அளிக்கும் வகையில் நிதி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி வெற்றிடங்களுக்கேற்ப தெரிவுசெய்யப்படுவர். நிரப்பப்படவுள்ள வெற்றிடங்களில் 10% பெண் விண்ணப்பதாரிகளுக்கு ஒதுக்கிவைக்கப்படும்.

(i) *பெறுபேறு வெளியிடல்*.- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சைக்குத் தகுதிபெற்ற விண்ணப்பதாரியின் எழுத்துப் பரீட்சைப் புள்ளி மற்றும் நேர்முகப் பரீட்சையின் புள்ளி ஆகியவற்றின் மொத்தப் புள்ளிகளுக்கிணங்க இறங்குவரிசையில் தயாரிக்கப்பட்ட பட்டியலானது சுங்கத் திணைக்களத்தின் சுங்கப் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளதும் பெறுபேறு தபாலிலோ அல்லது www.results.exams.gov.lk எனும் அலுவலக வெப்தளத்தினூடாகவோ இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும்.

**குறிப்பு**.- சுங்கத் திணைக்களத்தினது வேலைகளுக்கேற்ப பெண் அலுவலர்களும் இரவு வேளையில் கடமைபுரிய வேண்டியிருக்கும்.

6. விண்ணப்பதாரர்கள் (ஆண்/பெண்) ஒவ்வொருவரும் பரீட்சைக்குரிய விண்ணப்பத் திகதி முடிவுறுவதற்கு முன்னர் சகல தேவைப்பாடுகளையும் பூர்த்திசெய்திருக்க வேண்டுமென்பது கட்டாயமானதாகும்.

7. **விண்ணப்பிக்கும் முறை**.- (i) இந்த அறிவித்தலின் இறுதியில் மாதிரி விண்ணப்பப்படிவம் ஒன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தாம் பரீட்சை எழுதுவதற்கு உத்தேசித்துள்ள மொழிமூலத்தில் தாமாகவே விண்ணப்பங்களை இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க தயாரித்து சொந்த கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பத்தினது ஒவ்வொரு கூட்டிலும் அறிவுறுத்தலுக்கிணங்க விண்ணப்ப தாரர்களால் நிரப்பப்பட வேண்டியதுடன் ஏதாவது கூட்டினுள் பொருத்தமற்றவை இருப்பின், அத்தகைய கூட்டினுள் "பொருத்தமற்றவை" என்ற பதம் எழுதப்படல் வேண்டும். கண்டிப்பாக கவனிக்கப்படவேண்டியது யாதெனில், விண்ணப்பத்தில் கூடுகள் நிரப்பப்படாது விடுதலானது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கான காரணமாக இருக்கும். (விண்ணப்பங்களானது ஏ4 அளவிலான தாளில் தயாரித்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பத்தில் 1 தொடக்கம் 6 வரையான தலைப்பு இலக்கங்கள் முதல் பக்கத்திலும் 7 தொடக்கம் 11 வரையிலானவை இரண்டாவது பக்கததிலும் மீதியானவை மூன்றாவது பக்கத்திலும் வரும் விதம் தயாரித்தல் வேண்டும்.). சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல மாதிரி விண்ணப்பங்களில் பரீட்சையின் தலைப்பானது ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தினது நிழற்படப் பிரதியொன்றினை தம்முடன் வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.

(ii) விண்ணப்பங்களானது "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்ற விலாசத்திற்கு 2016.03.14 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் பெறப்படும் எந்தவொரு விண்ணப்பப் படிவங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

(iii) பரீட்சைக் கட்டணமாக 750 ரூபாவினை ஏதாவது தபால்/உப தபால் அலுவலகத்தில், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13 ஆம் இலக்க வருமான தலைப்பின் கீழ் வரவு வைப்பதற்காக செலுத்துதல் வேண்டும். பற்றுச்சீட்டானது விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டியதுடன் விண்ணப்பதாரர்கள் பற்றுச்சீட்டின் படப்பிரதி யொன்றினை தம்மிடம் வைத்துக்கொள்ள ஆலோசனை வழங்கப்படுகின்றது. இக்கட்டணமானது எச்சந்தர்ப்பத்திலும் மீளச் செலுத்தப்பட மாட்டாது.

(iv) அரசாங்க திணைக்களங்களில் அல்லது சபைகளில் அல்லது கூட்டுத்தாபனங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகள், தற்போது தாங்கள் சேவையாற்றும் திணைக்களங்கள் அல்லது நிறுவனங்களின் தலைவர்களினூடாக தங்களது விண்ணப்பங்களை அனுப்பிவைத்தல்

வேண்டும். விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை 2016.03.14 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினை சென்றடைய வேண்டுமென்ற வேண்டு கோளுடன் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் திணைக்கள அல்லது நிறுவனங்களின் தலைவர்களுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் தனிப்பட்ட முறையில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கோ அல்லது திணைக்களத்தைச் சேர்ந்த வேறு எவரேனும் உத்தியோகத்தருக்கோ அனுப்பப்படலாகாது. இத்திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவை அத்திணைக்களங்களுக்கூடாக அனுப்பப்பட்டாலும் கூட அவைகள் நிராகரிக்கப்படும். அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பத்தில் திணைக்களத் தலைவர்/நிறுவனத் தலைவர் விண்ணப்பதாரரது கையொப்பத்தினை உறுதிப்படுத்தி அவரது கையொப்பம், அலுவலக முத்திரை என்பன இடப்படாதவிடத்து அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(v) *உறுதிப்படுத்துதல்*.- அரசாங்க சேவையிலுள்ள ஒரு விண்ணப்ப தாரியின் கையொப்பமானது அவரது திணைக்களத் தலைவரினால் அல்லது அவரது சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரரின் கையொப்பங்கள் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அதாவது சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், வழக்கறிஞர், பிரசித்த நொத்தாரிசு, அரசாங்க பாடசாலை அதிபர் அல்லது பணிப்பாளரால் நிர்வகிக்கப்படும் பாடசாலை, கடற்படை, வான்படை அல்லது தரைப்படை அதிகாரமுடைய அதிகாரி, 2,40,360 ரூபா அல்லது அதற்குமேல் வருடாந்த சம்பளமுள்ள நிரந்தர அரசாங்க அலுவலர், பௌத்த ஆலயமொன்றின் பிரதம குரு அல்லது உயர்மத குரு அல்லது ஏதாவது வழிபாட்டுத்தலமொன்றுக்கு பொறுப்பாகவுள்ள அல்லது முக்கிய பதவி வகிப்பவர்.

8. (i) **பரீட்சை அனுமதிப்பத்திரம்**.- வர்த்தமானி அறிவித்த லில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உடையவர்கள் மட்டும் விண் ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க கணிப்பின்படி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயது எல்லைக்குட்பட்டவர்களது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் குறித்துரைக்கப்பட்டிருப்பின் குறித்த பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மொழி மூலம், விண்ணப்பதாரியின் கையொப்பம், மற்றும் கையொப்பத்தினை உறுதிப்படுத்துதலும், தேவையாயின் மாத்திரம் திணைக்களத் தலைவரின் அத்தாட்சிப்படுத்தலுடனும் திருத்தமாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்படும். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை விநியோகிக்கப்பட்டதும் அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களம் பத்திரிகை அறிவிப்பொன்றினை வெளியிடும். அவ் அறிவித்தல் வெளியாகி இரண்டு அல்லது மூன்று நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அப்போது விண்ணப்பதாரியின் பெயர், விலாசம், அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர் என்பன குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்பின் வெளிப்பிரதேசமாயின், மேலே குறிப்பிட்ட விடயங்களுடன் அனுமதி அட்டை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கம், குறிப்பிட்ட உங்களது கோரிக்கைக் கடிதம் ஒன்றை தம்வசம் வைத்துக்கொண்டு பரீட்சைகள் திணைக்களத்துக்கு அனுப்புதல் பயனுள்ளதாகும்.

(ii) பரீட்சைக்குத் தோற்றுகின்ற சகல விண்ணப்பதாரிகளும் பரீட்சையின் அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொள்ளுவதுடன் அனுமதிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளில் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்தப்பட்ட தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள். பரீட்சார்த்தி களுக்கான விதிகளும் ஒழுங்குவிதிகளும் இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) வின் ஆரம்பத்தில் வேறாக தரப்பட்டுள்ளன. இந்த விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகுதிகளையும் உடையவர் என்பதை ஏற்றுக்கொள்ளும் ஒரு சாதனமாக கொள்ளவியலாது.

9. **அடையாள அட்டைகள்**.- பரீட்சார்த்திகள் அவர்களது ஆளடை யாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இந்நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;
(ஆ) பரீட்சைத் திகதிக்கு முன்பதாக ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாது வழங்கப்பட்ட செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்கூறப்பட்டவாறான ஆவணமொன்றினை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தியின் பரீட்சார்த்தத் தன்மை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் நிராகரிக்கப்படலாம்.

10. **தகைமை ஆவணங்கள்**.- (i) விண்ணப்பத்துடன், பரீட் சைக் கட்டணமாக செலுத்தப்பட்ட காசுக்கட்டளை தவிர்ந்த பிற ஆவணங்கள் எதுவும் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது. ஆனால் விதித்துரைக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் தேவையான விபரங்கள் விண்ணப்பத்தில் தரப்பட்டிருத்தல் வேண்டும். இந்த முறையில் சகல அம்சங்களிலும் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பமானது அதன் தகுதி களின் பேரில் தீர்மானிக்கப்பட்டு நிராகரிக்கப்படலாம்.

(ii) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் தகுதிபெற்ற பரீட்சார்த்திகள் தமது தகைமைகளை நிரூபிப்பதற்கான ஆவணச்சான்றிதழ்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

(iii) பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகள் தேவைப்படும்.

(அ) பொறுப்புள்ள ஆளொருவரினால் கையொப்பமிடப்பட்ட குணநலச் சான்றிதழ்.

**குறிப்பு**.- இத்தகைய குணநலச் சான்றிதழானது சமாதான நீதவான், வழங்கறிஞர், வதிவிட பிரதேச செயலாளர் அல்லது ஆண்டொன்றிற்கு 2,40,360 ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை திரட்டிய சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் அல்லது பொதுவாக நன்கு பிரசித்திபெற்ற இலகுவில் விபரங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியவருமான ஒருவரிடம் பெறப்படலாம். இத்தகைய உறுதிப்படுத்துபவரது பெயர், பதவி, முகவரி என்பன சான்றுப்படுத்தலில் தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

(அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் பரீட்சார்த்திகளின் விடயத்தில் அவர்கள் குணநலச் சான்றிதழ்களை சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட மாட்டார்கள்.)

(ஆ) பரீட்சார்த்தியின் பிறப்புப் பதிவினது சான்றுப்படுத்தப்பட்ட ஒரு பிரதி அல்லது பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட வயது பற்றிய ஒரு விசேட சான்றிதழ் (பிறப்பு பதிவுசெய்யப்படாத பரீட்சார்த்திகளது விடயத்தில்).

**குறிப்பு**.- (i) பாடசாலை அல்லது கல்வித் தேவைகளுக்கென வழங்கப்பட்ட விசேட பிறப்புச் சான்றிதழ் அல்லது பிறப்புப் பதிவி

லிருந்து எடுக்கப்பட்ட சான்றுபடுத்தப்பட்டதொரு பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ii) பிறப்புச் சான்றிதழ்களுக்குப் பதிலாக நம்பிக்கை உறுதிப் பத்திரங்களோ அல்லது ஞானஸ்நான சான்றிதழ்களோ ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

பரீட்சார்த்திகள் சாதாரணமாக பயன்படுத்தும் பெயர் அல்லது பெயர்களிலிருந்து பிறப்புச் சான்றிதழில் உள்ள பெயர் அல்லது பெயர்கள் வேறுபடின் அல்லது பரீட்சைக்கு விண்ணப்பதாரி தோற்றும் பெயர் வேறுபடின் பிறப்புகள், இறப்புகள் பதிவுச் சட்டத்தின் (அத்தியாயம் 110) 27 ஆம், 28 ஆம் பிரிவுகளின் நியதிகளுக்கு அமைய பிறப்புப் பதிவிலுள்ள பெயரை திருத்துவதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படல் வேண்டும்.

(iii) இலங்கைப் பிரசை என்ற பதிவுச்சான்றிதழ் அல்லது வம்சாவளிப் பிரசாவுரிமைக்கான கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட மூல உத்தியோகபூர்வ கடிதம் (ஏற்புடையதாயின்)

(iv) கல்வித் தகைமை மூலச்சான்றிதழ்கள் அல்லது அத்தகைய சான்றிதழ்கள் வழங்கப்படாதவிடத்து ஏனைய உத்தியோகபூர்வ ஆவணங்கள், அதாவது பல்கலைக்கழக பதிவாளர் ஒருவரினால் விண்ணப்பதாரி பட்டப்பரீட்சையில் சித்திபெற்றுள்ளார் என்ற உத்தியோகபூர்வ கடிதம், பரீட்சைகள் திணைக்களத்தினால் கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) சான்றிதழ் பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச்சித்தி அல்லது கல்விப் பொதுத்தராதர (உயர் தர) சான்றிதழ் பரீட்சையில் ஆங்கில மொழியில் சாதாரண சித்தியினை அவர் பெற்றுள்ளார் என்பதனை குறிப்பிட்டு வழங்கப்பட்ட அப்பரீட்சையின் பெறுபேற்றுத்தாள்.

(v) வலய/மாவட்ட/தேசிய விளையாட்டு போட்டிகளில் பெற்றுக் கொண்ட நிரூபண ஆவணம்.

(vi) விண்ணப்பத்தினை அனுப்புகின்ற வேளையில் சகல தேவையான ஆவணங்களையும் தயாராக வைத்திருக்கும்படி பரீட்சார்த்திகள் கேட்கப்படுகின்றனர். தேவையான ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற அல்லது தேவையான சந்தர்ப்பத்தில் அவற்றைச் சமர்ப் பிப்பதில் தாமதங்களை ஏற்படுத்துகின்ற பரீட்சார்த்திகள் இப்பதவிக்கான நியமனத்திற்கு தகுதியற்றவர்களாவர்.

11. **தவறான தகவல்களை சமர்ப்பிப்பதற்கான தண்டனை.**- இப்பரீட்சைக்கான ஒழுங்குவிதிகளின்படி எவரேனும் பரீட்சார்த்தி ஒருவர் அதற்குத் தோற்றுவதற்கு தகைமை அற்றவர் எனத் தெரியவருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம்.

பரீட்சைக்கு விண்ணப்பதாரி ஒருவரினால் தரப்பட்டுள்ள விண்ணப் பங்கள் ஏதேனும், அவரது அறிவுக்கு எட்டியவரையில் தவறானவை என அல்லது வேண்டுமென்றே விபரங்களைத் தரவில்லையென காணப்படின் அல்லது அவரது சேவைக் காலத்தின் எக்காலப்பகுதியி லேனும் அவர் பரீட்சைக்குத் தோற்றும் தகைமையற்றவர் என நிரூபிக்கப்படின் அவர் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவார். இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணக்கமாக இல்லாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

12. இந்த ஒழுங்குவிதிகளில் கவனிக்கப்படாத ஏதேனும் விடயம் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினது தற்றுணிபின்படி கையாளப்படும்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலம் வெளியிடப்படுகின்ற இந்த அறிவித்தலில் யாதேனும் வேறுபாடு காணப்படின் சிங்கள மொழியில் வெளியிடப்படும் அறிவித்தலே வலுப்பெறும்.

சுங்கப் பணிப்பாளர் நாயகம்.

இலங்கை சுங்கத் திணைக்களம்,
"சுங்க இல்லம்",
இல. 40, பிரதான வீதி,
கொழும்பு 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை சுங்கத் திணைக்களத்தின் சுங்க உதவி அத்தியட்சகர் தரம் II பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016**

OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO POSTS OF ASSISTANT SUPERINTENDENT OF CUSTOMS, GRADE II OF SRI LANKA CUSTOMS DEPARTMENT - 2016

[ ]
(அலுவலக பாவனைக்கு மாத்திரம்)

நீர் இப்பரீட்சையில் தோற்றுவதற்கான மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 [ ]
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

1. விண்ணப்பதாரரின் பெயர் :----.

1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்கள்) உதாரணம் :- HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA : ----.

1.2 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுட னான பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) (உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K.) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களம்/தமிழில்) :----.

2. நிரந்தர வதிவிட விலாசம் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

அனுமதி அட்டை அனுப்புவதற்கான விலாசம் :----.

3. தேசிய ஆள் அடையாள அட்டையினது விபரங்கள் :-

3.1 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3.2 வழங்கப்பட்ட திகதி :- [ ]

4. பால் :
ஆண் - 0
பெண் - 1 [ ]
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

5. நீங்கள் இலங்கைப் பிரசையா இல்லையா என்பதைக் குறிப்பிட வும் :-

வம்சாவழி மூலம் - 1
பதிவு மூலம் - 2 [ ]
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

6. இனம் :
சிங்களவர்-1, இலங்கைத் தமிழர்-2, இந்தியத் தமிழர்-3, முஸ்லிம்-4, பறங்கியர்-5, ஏனையோர்-6 ☐

(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

7. (அ) பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

(ஆ) விண்ணப்பம் முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

8. உடற்தகைமை தேவைப்பாடுகள் :

(i) உயரம் : .......... அடி .......... அங்குலம்

(ii) மார்புச் சுற்றளவு (விரிவடைந்த நிலையில்) : ............. அங்குலம்
(ஆண் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்)

9. நீர் ஏதாவது குற்றச்செயலுக்காக எப்பொழுதாவது நீதிமன்ற தண்டனை அனுபவித்துள்ளீரா ? (ஆம்/இல்லை) :----.

ஆமெனில், விபரங்களைக் குறிப்பிடவும் :----.

10. கல்வித் தகைமைகள் :

| பல்கலைக் கழகத்தினது பெயர் | பட்டம் | பட்டத்தினது தன்மை | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

(i) கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) சான்றிதழ் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் பெற்ற ஆகக்கூடிய சித்தி :-

பரீட்சையின் வருடம் :----.
சுட்டிலக்கம் :----.

(ii) கல்விப் பொதுத்தராதர (உயர் தர) சான்றிதழ் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் பெற்ற ஆகக்கூடிய சித்தி :----.

பரீட்சையின் வருடம் :----.
சுட்டிலக்கம் :----.

11. பரீட்சைக் கட்டணம் (பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும்) :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால்/ உப தபால் அலுவலகம் :
(ii) செலுத்திய பணம் :----.
(iii) செலுத்திய திகதி :----.
(iv) பற்றுச்சீட்டு இலக்கம் :----.

| |
|---|
| பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.) |

12. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் இத்தால் உறுதிமொழிகிறேன். இவற்றில் அடங்கியுள்ள விபரங்களில் ஏதேனும் பொய்யானவை அல்லது தவறானவை எனக் காணப்படின் தெரிவுக்கு முன்னராயின் தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கும் அல்லது தெரிவின் பின்னராயின் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாவேன். மேலும் பரீட்சை நடத்துதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினது சட்டவிதிகளுக்கமைய நான் நடந்துகொள்வேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

13. **விண்ணபதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் (பொருத்தமற்றதை வெட்டிவிடவும்.) :**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ... ............................ என்பவரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் அவரது கையொப்பம் எனது முன்னிலையில் .................. ஆந் திகதி இடப்பட்டது என்பதையும், அவர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டானது இணைக்கப்பட்டுள்ளது எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரது கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரது முழுப்பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
திகதி :----.

**குறிப்பு**.- வர்த்தமானப் பத்திரிகையின் 7 (v) ஆம் பந்தியில் குறிப்பிட்டதொரு நபரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

14. இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............. ................. என்பவர் இவ் அமைச்சில்/திணைக்களத்தில்/சபையில்/கூட்டுத்தாபனத்தில் கடமை புரிபவர் ; அத்துடன் அவர் மேலே குறிப்பிட்ட பதவிக்கு தெரிவுசெய்யப்படின் அவரை விடுவிக்க முடியும்/முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(அலுவலக முத்திரை)

திணைக்களத் தலைவரது பெயர் :----.
பதவி :----.
அலுவலக முகவரி :----.

2-306

## நிதி அமைச்சு

இலங்கை சுங்கத் திணைக்களம்

### இலங்கை சுங்கத் திணைக்களத்தின் சுங்க பரிசோதகர் தரம் II பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2016

இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் சுங்க பரிசோதகர் தரம் II ஆம் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கென திறந்த போட்டிப் பரீட்சையொன்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2016, மே மாதத்தில் கீழே தரப்பட்டுள்ள அட்டவணை I இல் காட்டப்பட்டுள்ளவாறு தீவு முழுவதிலும் அமைந்துள்ள பிரதான நகரங்களில் நடாத்தப்படும். பரீட்சை நடைபெறும் திகதியானது பத்திரிகைகள் மூலம் உரிய காலத்தில் அறிவிக்கப்படும். இப்பரீட்சையினைப் பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகம் கொண்டுள்ளார்.

**அட்டவணை I**

| மாகாணம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| மேல் | கொழும்பு | 01 |
| | கம்பஹா | 02 |
| | களுத்துறை | 03 |
| மத்திய | கண்டி | 04 |
| | மாத்தளை | 05 |
| | நுவரெலியா | 06 |
| தென் | காலி | 07 |
| | மாத்தறை | 08 |
| | அம்பாந்தோட்டை | 09 |
| வடக்கு | யாழ்ப்பாணம் | 10 |
| | மன்னார் | 11 |
| | வவுனியா | 12 |
| | முல்லைத்தீவு | 13 |
| | கிளிநொச்சி | 14 |
| கிழக்கு | மட்டக்களப்பு | 15 |
| | அம்பாறை | 16 |
| | திருகோணமலை | 17 |
| வடமேல் | குருநாகல் | 18 |
| | புத்தளம் | 19 |
| வடமத்திய | அநுராதபுரம் | 20 |
| | பொலன்னறுவை | 21 |
| ஊவா | பதுளை | 22 |
| | மொனராகலை | 23 |
| சப்பிரகமுவ | இரத்தினபுரி | 24 |
| | கேகாலை | 25 |

காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நகரங்களுள் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக உத்தேசிக்கும் நகரத்தின் இலக்கத்துடன் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். ஏதாவதொரு நிலையத்தில் போதுமான அளவில் பரீட்சைக்காக பரீட்சார்த்திகள் விண்ணப்பித்திருக்காவிடின், அவர்களின் இரண்டாவது விருப்பத்திற்கமைய விண்ணப்பித்துள்ள நகரத்திற்கோ மற்றும் இரண்டாவது விருப்பத்தேர்வு நகரத்திலும் போதிய பரீட்சார்த்திகள் இல்லாவிடின், அண்மித்துள்ள வேறு நகரமொன்று அவர்களுக்கு வழங்கப்படும். பரீட்சையின் பொருட்டு விண்ணப்பித்துள்ள நகரத்தை/நகரங்களை பின்னர் மாற்ற இடமளிக்கப்படமாட்டாது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இரு பாலாரிடமிருந்தும் இப்பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**2. தகைமைகள் :**

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தாம்–

(அ) இலங்கைப் பிரசையாகவும் ;

(ஆ) மிகச் சிறந்த ஒழுக்கமுடையவராகவும் ;

(இ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 24 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதற்கமைய வயது தொடர்பான தகைமையப் பூர்த்திசெய்யப்படுவது விண்ணப்பதாரி 1992.03.14 ஆந் திகதி அல்லது அதற்கு பின்னர் பிறந்திருப்பதுடன் மற்றும் 1998.03.14 ஆந் திகதி அல்லது அதற்குப் முன்னர் பிறந்திருத்தல் வேண்டும்.)

**குறிப்பு**.– ஏதேனும் சமயக் கிளையில் மதகுரு அந்தஸ் திலுள்ள எந்தவொரு நபருக்கும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

(ii) ***உடற் தகைமைகள்.***– ஆண்களின் விடயத்தில் அவர்களுடைய உயரமானது 5 அடி 5 அங்குலங்களுக்கு குறையாமலும் மார்புச் சுற்றளவு (விரிவடைந்த நிலையில்) 33 அங்குலங்களுக்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.

பெண்களின் விடயத்தில் அவர்களுடைய உயரமானது 5 அடி 3 அங்குலங்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

(iii) ***கல்வித் தகைமைகள்.***- விண்ணப்பதாரிகள் பின்வரும் கல்வித் தகைமைகளை உடையவர்களாக இருத்தல் வேண்டும் :

(அ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் மூன்று பிரதான பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர) சான்றிதழ் பரீட்சையில் இரு தடவைகளில் பிரதான பாடங்களான சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி மற்றும் கணிதம் அடங்கலாக ஐந்து பாடங்களில் திறமைச்சித்தியும் ஆங்கில மொழியில் சாதாரண சித்தி அடங்கலாக ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**3. சேவை நிபந்தனைகள் :**

(i) ***வேதனம்.***– இப்பதவிக்கான திரட்டிய மாதாந்த வேதன அளவுத்திட்டம் வருமாறு.-

ரூபா 14,280 - 145 X 7 - 180 X 10 - 240 X 17 - ரூபா 21,175

(பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 6/ 2006 (IV) - ஆ. எஸ். 1-2006)

(ii) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்துக்குரியது என்பதுடன் விதவைகள்/ அநாதைகள் ஓய்வூதியத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

(iii) சித்திபெற்று தெரிவாகும் பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டுகாலப்பகுதிக்கு தகுதிகூர்காண் நிலையில் வைக்கப்பட்டு நியமனம் வழங்கப்படும்.

(iv) நியமனம் பெற்றவர்கள் நாட்டின் எப்பகுதியிலும் சேவை யாற்றக்கூடிய உடல் தகுதியினை உடையவர்கள் என்பதை பரீட்சிப்பதற்காக அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரினால் நடாத்தப்படும் மருத்துவ பரீட்சைக்கு உட்படுதல் வேண்டும்.

(v) நியமனம் பெற்றவர்கள் இத்தீவின் எப்பாகத்திலும் இரவிலும் பகலிலும் சேவையாற்றுவதற்கு பணிக்கப்படுவார்கள்.

(vi) அரசாங்க வர்த்தமானி அறிவித்தலின் பகுதி I : தொகுதி (IIஅ) ஆம் பிரிவின் தொடக்கத்தில் வெளியிடப் பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனை களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

4. **பரீட்சைத் திட்டம்**.- ஆட்சேர்ப்புக்கான பரீட்சையானது பின்வரும் மூன்று (3) வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும் :-

| | | புள்ளிகள் |
|---|---|---|
| (i) | உளச்சார்புப் பரீட்சை | 100 |
| (ii) | கணிதம் | 100 |
| (iii) | ஆங்கில மொழி | 100 |
| | மொத்தம் | 300 |

***உளச்சார்புப் பரீட்சை வினாத்தாள்***.- இவ்வினாத்தாளானது விண்ணப்பதாரியினது மொழித் தேர்ச்சி மற்றும் தர்க்க ரீதியான அறிவினை அளவிடும் வகையில் தயாரிக்கப்பட்டதாக இருக்கும் (இவ்வினாத்தாளானது 50 பல்தேர்வு வினாக்கள் மற்றும் குறுகிய விடையளிக்கும் வகையிலான வினாக்களைக் கொண்டிருக்கும்). சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

***கணித வினாத்தாள்***.- இவ்வினாத்தாளானது கணித அறிவினை பரிசோதிப்பதற்கான வினாக்களைக் கொண்டிருக்கும். சகல வினாக் களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

***ஆங்கில மொழி வினாத்தாள்***.- விண்ணப்பதாரிகளது வாசிப்பு, எழுத்து கிரகித்தல் மற்றும் தொடர்பாடல் திறன்களை பரிசோதிப்பதற் காக தயாரிக்கப்பட்டதாக இருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**குறிப்பு**.- இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும். இந்த அறிவித்தலின் பந்தி 2 (iii) இல் குறிப்பிடப்பட்ட தகைமை பரீட்சையில் சித்திபெற்ற மொழியிலேயோ அல்லது அரச கரும மொழியொன்றிலேயோ விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்ற வேண்டும். பரீட்சார்த்தி விண்ணப்பத்திற் கொடுத்த பரீட்சை மொழியை பின்னர் மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(i) தெளிவற்ற எழுத்துக்கும் எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும்.

(ii) தகைமையுடைய விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகளானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பிவைக்கப்படும். ஆனால் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் பெற்றுள்ளார் எனக் கருதுதல் ஆகாது.

(iii) *மதிப்பிடுகை*.- ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 60% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் தற்போதுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு இணங்க மொத்தத்தின் இறங்குவரிசையில் முதற்கட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். முதற்கட்ட நேர்முகப் பரீட்சையில் விளையாட்டு திறமைகளுக்காக ஆகக்கூடியது 10 புள்ளிகள் வழங்கப்படும். அதன் பின்னர் பொது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இதன்போது எவ்வித புள்ளிகளும் வழங்கப்படமாட்டாது. பரீட்சைகளில் பெறப்பட்ட மொத்தப் புள்ளிகளும் முதற்கட்ட நேர்முகப் பரீட்சையில் வழங்கப்பட்ட புள்ளிகளும் மாத்திரமே கவனத்திற்கொள்ளப்படும்.

*முதற்கட்ட நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் நடைமுறை :*

*வலய மட்டத்தில் தனிப்பட்ட விளையாட்டுக்கான புள்ளிகள்*.- முதலாமிடத்திற்கு 3 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 2 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 1 புள்ளி.

*மாவட்ட மட்டத்தில் தனிப்பட்ட விளையாட்டுக்கான புள்ளிகள்*.- முதலாமிடத்திற்கு 4 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 3 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 2 புள்ளிகள்.

*தேசிய மட்டத்தில் தனிப்பட்ட விளையாட்டுக்கான புள்ளிகள்*.- முதலாமிடத்திற்கு 5 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 4 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 3 புள்ளிகள்.

5. **தெரிவுமுறை அடிப்படை அல்லது தேர்ந்தெடுக்கும் முறை**.- எழுத்துப் பரீட்சையிலும் நேர்முகப் பரீட்சையிலும் திறம்பட சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் நியமனம் அளிக்கும் வகையில் நிதி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி வெற்றிடங்களுக்கேற்ப தெரிவுசெய்யப்படுவர். நிரப்பப்படவுள்ள வெற்றிடங்களில் 10% பெண் விண்ணப்பதாரிகளுக்கு ஒதுக்கிவைக்கப்படும்.

(i) *பெறுபேறு வெளியிடல்*.- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சைக்குத் தகுதிபெற்ற விண்ணப்பதாரியின் எழுத்துப் பரீட்சைப் புள்ளி மற்றும் நேர்முகப் பரீட்சையின் புள்ளி ஆகியவற்றின் மொத்தப் புள்ளிகளுக்கிணங்க இறங்குவரிசையில் தயாரிக்கப்பட்ட பட்டியலானது சுங்கத் திணைக்களத்தின் சுங்கப் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளதும் பெறுபேறு தபாலிலோ அல்லது www.results.exams.gov.lk எனும் அலுவலக வெப் தளத்தினூடாகவோ இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும்.

**குறிப்பு**.- சுங்கத் திணைக்களத்தினது வேலைகளுக்கேற்ப பெண் அலுவலர்களும் இரவு வேளையில் கடமைபுரிய வேண்டியிருக்கும்.

6. விண்ணப்பதாரர் (ஆண்/பெண்) ஒவ்வொருவரும் பரீட்சைக்குரிய விண்ணப்பத் திகதி முடிவுறுவதற்கு முன்னர் சகல தேவைப்பாடு களையும் பூர்த்திசெய்திருக்க வேண்டுமென்பது கட்டாயமானதாகும்.

7. **விண்ணப்பிக்கும் முறை :**

(i) இந்த அறிவித்தலின் இறுதியில் மாதிரி விண்ணப்பப்படிவம் ஒன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தாம் பரீட்சை எழுதுவதற்கு உத்தேசித்துள்ள மொழிமூலத்தில்

தாமாகவே விண்ணப்பங்களை இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க தயாரித்து சொந்த கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பத்தினது ஒவ்வொரு கூட்டிலும் அறிவுறுத்தலுக்கிணங்க விண்ணப்ப தாரர்களால் நிரப்பப்பட வேண்டியதுடன் ஏதாவது கூட்டினுள் பொருத்தமற்றவை இருப்பின், அத்தகைய கூட்டினுள் "பொருத்தமற்றவை" என்ற பதம் எழுதப்படல் வேண்டும். கண்டிப்பாக கவனிக்கப்படவேண்டியது யாதெனில், விண்ணப்பத்தில் கூடுகள் நிரப்பப்படாது விடுதலானது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கான காரணமாக இருக்கும். (விண்ணப்பங்களானது ஏ4 அளவிலான தாளில் தயாரித்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பத்தில் 1 தொடக்கம் 5 வரையான தலைப்பு இலக்கங்கள் முதல் பக்கத்திலும் 6 தொடக்கம் 11 வரையிலானவை இரண்டாவது பக்கத்திலும் மீதியானவை மூன்றாவது பக்கத்திலும் வரும் விதம் தயாரித்தல் வேண்டும்.). சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல மாதிரி விண்ணப்பங்களில் பரீட்சையின் தலைப்பானது ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பங்களானது "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த.பெ. இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு 2016, மாச்சு 14 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். இத்திகதிக்குப் பின் பெறப்படும் எந்தவொரு விண்ணப்பப்படிவங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பப்படிவம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

(iii) பரீட்சைக் கட்டணமாக 500 ரூபாவை ஏதாவது தபால்/ உப தபால் அலுவலகத்தில், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13 ஆம் இலக்க வருமான தலைப்பின் கீழ் வரவுவைப்பதற்காக செலுத்தப்படல் வேண்டும். பற்றுச்சீட்டானது விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டியதுடன் விண்ணப்பதாரர்கள் பற்றுச்சீட்டின் படப்பிரதியொன்றினை தம்மிடம் வைத்துக்கொள்ளும்படி ஆலோசனை வழங்கப்படுகின்றது. இக்கட்டணமானது எச்சந்தர்ப்பத்திலும் மீளச் செலுத்தப்படமாட்டாது.

(iv) அரசாங்க திணைக்களங்களில்/ சபைகளில்/ கூட்டுத்தாப னங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகள், தற்போது தாங்கள் சேவையாற்றும் திணைக்களங்கள் அல்லது நிறுவனங்களின் தலைவர்களினூடாக தங்களது விண்ணப் பங்களை அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை 2016, மாச்சு 14 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினை சென்றடைய வேண்டுமென்ற வேண்டு கோளுடன் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் திணைக்கள அல்லது நிறுவனங்களின் தலைவர்களுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் தனிப்பட்ட முறையில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கோ அல்லது திணைக்களத்தைச் சேர்ந்த வேறு எவரேனும் உத்தியோகத்தருக்கோ அனுப்பப்படலாகாது. இத்திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவை அத்திணைக்களங்களுக்கூடாக அனுப்பப்பட்டாலும் கூட அவைகள் நிராகரிக்கப்படும்.

அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப் பத்தில் திணைக்களத் தலைவர்/ நிறுவனத் தலைவர், விண்ணப்பதாரரது கையொப்பத்தினை உறுதிப்படுத்தி அவரது கையொப்பம், அலுவலக முத்திரை என்பன இடப் படாதவிடத்து அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும்.

(v) ***உறுதிப்படுத்துதல்***.- அரசாங்க சேவையிலுள்ள ஒரு விண்ணப்பதாரியின் கையொப்பமானது அவரது திணைக் களத் தலைவரினால் அல்லது அவரது சார்பில் அதிகாரப் படுத்தப்பட்ட அலுவலர் ஒருவரினால் உறுதிப் படுத்தப்படல் வேண்டும்.

ஏனைய விண்ணப்பதாரரின் கையொப்பங்கள் அதிகார மளிக்கப்பட்ட ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அதாவது சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணை யாளர், வழக்கறிஞர், பிரசித்த நொத்தாரிசு, அரசாங்க பாடசாலை அதிபர் அல்லது பணிப்பாளர் நிர்வகிக்கப்படும் பாடசாலை, கடற்படை, வான்படை அல்லது தரைப்படை அதிகாரமுடைய அதிகாரி, ரூபா 2,40,360 அல்லது அதற்குமேல் வருடாந்த சம்பளமுள்ள நிரந்தர அரசாங்க அலுவலர், பௌத்த ஆலயமொன்றின் பிரதம குரு அல்லது உயர்மத குரு அல்லது ஏதாவது வழிபாட்டுத்தலமொன்றுக்கு பொறுப்பாகவுள்ள அல்லது முக்கிய பதவி வகிப்பர்.

8. (i) ***பரீட்சை அனுமதிப்பத்திரம்***.- வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உடையவர்கள் மட்டும் விண்ணப் பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க கணிப்பின்படி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயது எல்லைக்குட்பட்டவர்களது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இறுதித் திகதிக்கு அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் குறித்துரைக்கப்பட்டிருப்பின் குறித்த பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மொழி மூலம், விண்ணப்பதாரியின் கையொப்பம், மற்றும் கையொப்பத்தினை உறுதிப்படுத்துதலும், தேவையாயின் மாத்திரம் திணைக்களத் தலைவரின் அத்தாட்சிப்படுத்தலுடனும் திருத்தமாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்படும். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை விநியோ கிக்கப்பட்டதும் அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களம் பத்திரிகை அறிவிப்பொன்றினை வெளியிடும். அவ் அறிவித்தல் வெளியாகி இரண்டு அல்லது மூன்று நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அப்போது விண்ணப்பதாரியின் பெயர், விலாசம், அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர் என்பன குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்பின் வெளிப் பிரதேசமாயின், மேலே குறிப்பிட்ட விடயங்களுடன் அனுமதி அட்டை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கம், குறிப்பிட்ட உங்களது கோரிக்கைக் கடிதம் என்பவற்றை தம்வசம் வைத்துக்கொண்டு பரீட்சைகள் திணைக்களத்திடம் அறிவித்தல் பயனுள்ளதாகும்.

(ii) பரீட்சைக்குத் தோற்றுகின்ற சகல விண்ணப்பதாரிகளும் பரீட்சையின் அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொள்ளுவதுடன் அனுமதிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளில் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்தப்பட்ட தமது அனுமதி அட்டைகளை சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள். பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் ஒழுங்குவிதிகளும் இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) இல் வேறாக தரப்பட்டுள்ளன. இந்த விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும்.

***குறிப்பு***.- பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகுதிகளையும் உடையவர் என்பதை ஏற்றுக்கொள்ளும் ஒரு சாதனமாக கொள்ளவியலாது.

*9.* ***அடையாள அட்டைகள்.***- பரீட்சார்த்திகள் அவர்களது அடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இந்நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை ;

(ஆ) பரீட்சைத் திகதிக்கு முன்பதாக ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாது வழங்கப்பட்ட செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்கூறப்பட்டவாறான ஆவணமொன்றினை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தியின் பரீட்சார்த்தத் தன்மை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பெயரில் நிராகரிக்கப்படலாம்.

*10.* ***தகைமை ஆவணங்கள்.***- (i) விண்ணப்பத்துடன், பரீட்சைக் கட்டணமாக செலுத்தப்பட்ட காசுக்கட்டளை தவிர்ந்த பிற ஆவணங்கள் எதுவும் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது. ஆனால் விதித்துரைக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் தேவையான விபரங்கள் விண்ணப்பத்தில் தரப்பட்டிருத்தல் வேண்டும். இந்த முறையில் சகல அம்சங்களிலும் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பமானது அதன் தகுதிகளின் பெயரில் தீர்மானிக்கப்பட்டு நிராகரிக்கப்படலாம்.

(ii) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் தகுதிபெற்ற பரீட்சார்த்திகள் தமது தகைமைகளை நிரூபிப்பதற்கான ஆவணச்சான்றிதழ்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

(iii) பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகள் தேவைப்படும்.

(அ) பொறுப்புள்ள ஆளொருவரினால் ஒப்பமிடப்பட்ட குணநலச் சான்றிதழ்.

**குறிப்பு.**- இத்தகைய குணநலச் சான்றிதழானது சமாதான நீதவான், வழங்கறிஞர், வதிவிட பிரதேச செயலாளர் அல்லது ஆண்டொன்றிற்கு 2,40,360 ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை திரட்டிய சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் அல்லது பொதுவாக நன்கு பிரசித்திபெற்ற இலகுவில் விபரங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியவருமான ஒருவரால் பெறப்படலாம். இத்தகைய உறுதிப்படுத்துபவரது பெயர், பதவி, முகவரி என்பன சான்றுப் படுத்தலில் தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

(அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் பரீட்சார்த்திகளின் விடயத்தில் அவர்கள் குணநலச் சான்றிதழ்களை சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட மாட்டார்கள்.)

(ஆ) பரீட்சார்த்திகள் பிறப்புப் பதிவினது சான்றுப்படுத்தப்பட்ட ஒரு பிரதி அல்லது பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட வயது பற்றிய ஒரு விசேட சான்றிதழ் (பிறப்பு பதிவுசெய்யப்படாத பரீட்சார்த்திகளது விடயத்தில்)

**குறிப்பு.**- (i) பாடசாலை அல்லது கல்வித் தேவைகளுக்கென வழங்கப்பட்ட விசேட பிறப்புச் சான்றிதழ் அல்லது பிறப்புப் பதிவிலிருந்து எடுக்கப்பட்ட சான்றுபடுத்தப்பட்டதொரு பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ii) பிறப்புச் சான்றிதழ்களுக்குப் பதிலாக நம்பிக்கை உறுதிப் பத்திரங்களோ அல்லது ஞானஸ்நான சான்றிதழ்களோ ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

பரீட்சார்த்தி சாதாரணமாக பயன்படுத்தும் பெயர் அல்லது பெயர்களிலிருந்து பிறப்புச் சான்றிதழில் உள்ள பெயர் அல்லது பெயர்கள் வேறுபடின் அல்லது பரீட்சைக்கு விண்ணப்பதாரி தோற்றும் பெயர் வேறுபடின் பிறப்புகள், இறப்புகள் பதிவுச் சட்டத்தின் (அத்தியாயம் 110) 27 ஆம், 28 ஆம் பிரிவுகளின் நியதிகளுக்கு அமைய பிறப்புப் பதிவிலுள்ள பெயரை திருத்துவதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படல் வேண்டும்.

(iii) இலங்கைப் பிரசை என்ற பதிவுச்சான்றிதழ் அல்லது வம்சாவளிப் பிரசாவுரிமைக்கான கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட மூல உத்தியோகபூர்வ கடிதம் (ஏற்புடையதாயின்)

(iv) கல்வித் தகைமை மூலச்சான்றிதழ்கள் அல்லது அத்தகைய சான்றிதழ்கள் வழங்கப்படாதவிடத்து ஏனைய உத்தியோகபூர்வ ஆவணங்கள்

(v) வலய/மாவட்ட/தேசிய விளையாட்டு போட்டிகளில் பெற்றுக் கொண்ட நிரூபண ஆவணம்

(vi) விண்ணப்பத்தினை அனுப்புகின்ற சமயத்தில் சகல தேவையான ஆவணங்களையும் தயாராக வைத்திருக்கும்படி பரீட்சார்த்திகள் கேட்கப்படுகின்றனர். தேவையான ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற அல்லது தேவையான சந்தர்ப்பத்தில் அவற்றைச் சமர்ப்பிப்பதில் தாமதங்களை ஏற்படுத்துகின்ற பரீட்சார்த்திகள் இப்பதவிக்கான நியமனத்திற்கு தகுதியற்றவர்களாவர்.

*11.* ***தவறான தகவல்களை சமர்ப்பிப்பதற்கான தண்டனை.***- இப்பரீட்சைக்கான ஒழுங்குவிதிகளின்படி எவரேனும் பரீட்சார்த்தி ஒருவர் அதற்குத் தோற்றுவதற்கு தகைமை அற்றவர் எனத் தெரியவருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தி உரிமை இரத்துச்செய்யப்படலாம்.

பரீட்சைக்கு விண்ணப்பதாரி ஒருவரினால் தரப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏதேனும் அவரது அறிவுக்கு எட்டியவரையில் தவறானவை என அல்லது வேண்டுமென்றே விபரங்களைத் தரவில்லையென காணப்படின் அல்லது அவரது சேவைக் காலத்தின் எக்காலப்பகுதியிலேனும் அவர் பரீட்சைக்குத் தோற்றத் தகைமையற்றவர் என நிரூபிக்கப்படின் அவர் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவார். இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக இல்லாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

12. இந்த ஒழுங்குவிதிகளில் கவனிக்கப்படாத ஏதேனும் விடயம் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி கையாளப்படும்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலம் வெளியிடப்படுகின்ற இந்த அறிவித்தலில் யாதேனும் வித்தியாசம் காணப்படின் சிங்கள மொழியில் வெளியிடப்படும் அறிவித்தலே வலுப்பெறும்.

சுங்கப் பணிப்பாளர் நாயகம்.

இலங்கை சுங்கத் திணைக்களம்,
"சுங்க இல்லம்",
இல. 40, பிரதான வீதி,
கொழும்பு 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை சுங்கத் திணைக்களத்தின் சுங்க பரிசோதகர் தரம் II பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016**

OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO POSTS OF INSPECTOR OF CUSTOMS, GRADE II OF SRI LANKA CUSTOMS DEPARTMENT - 2016

(அலுவலக பாவனைக்கு மாத்திரம்)

நீர் இப்பரீட்சையில் தோற்றுவதற்கான மொழிமூலம் :
சிங்களம் – 2
தமிழ் – 3
ஆங்கிலம் – 4

(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

பரீட்சைக்குத் தோற்றவுள்ள நகரமும் நகர இலக்கமும் (அட்டவணை 1 ஐ பார்க்க)

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 1 ஆம் தெரிவு | | |
| 2 ஆம் தெரிவு | | |

1. 1.1 விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) உதாரணம் :- HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA : ----.

1.2 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடனான பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) (உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K.) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களம்/தமிழில்) :----.

2. நிரந்தர வதிவிட முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
அனுமதி அட்டை அனுப்புவதற்கான முகவரி :----.

3. தேசிய ஆள் அடையாள அட்டையினது விபரங்கள் :-

3.1 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3.2 வழங்கப்பட்ட திகதி :----.

4. பால் :
ஆண்-0
பெண்-1
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

5. நீங்கள் இலங்கைப் பிரசையா இல்லையா என்பதைக் குறிப்பிடவும் :----.
வம்சாவழி மூலம்-1
பதிவு மூலம்-2
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

6. இனம் :
சிங்களவர்-1, இலங்கைத் தமிழர்-2, இந்தியத் தமிழர்-3, முஸ்லிம்-4, பறங்கியர்-5, ஏனையோர்-6
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

7. (அ) பிறந்த திகதி :

| ஆண்டு | | | | மாதம் | | திகதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

| வருடங்கள் | | | | மாதங்கள் | | நாட்கள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

8. உடற்தகைமை தேவைப்பாடுகள் :

(i) உயரம் : .......... அடி ......... அங்குலம்

(ii) மார்புச் சுற்றளவு (விரிவடைந்த நிலையில்) : ............. அங்குலம்
(ஆண் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்)

9. நீர் ஏதாவது குற்றச்செயலுக்காக எப்பொழுதாவது நீதிமன்ற தண்டனை அனுபவித்துள்ளீரா ? (ஆம்/இல்லை) :----.
ஆம் எனில், விபரங்களைக் குறிப்பிடவும் :----.

10. கல்வித் தகைமைகள் :

(i) ஒரு அமர்வில் பெறப்பட்ட கல்விப் பொதுத்தராதர (உயர் தர) சான்றிதழ் பெறுபேறு :
பரீட்சையினது வருடம் :----.
சுட்டெண் :----.

| பாடங்கள் | பெறுபேறு |
|---|---|
| | |

(ii) கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) சான்றிதழ் பெறுபேறு :

| பாடங்கள் | பெறுபேறு | வருடம் | சுட்டெண் |
|---|---|---|---|
| | | | |

(iii) கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில மொழியில் சாதாரண சித்தியினை பெற்றுள்ளீரா ? (ஆம்/இல்லை)

11. பரீட்சைக் கட்டணம் (பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும்) :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால்/உப தபால் அலுவலகம் :
(ii) செலுத்திய பணம் :----.
(iii) செலுத்திய திகதி :----.

(iv) பற்றுச்சீட்டு இலக்கம் :----.

இந்த விபரங்கள் கட்டாயமாகக் கொடுக்கப்படல் வேண்டும்.

| பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.) |
|---|

12. **விண்ணப்பதாரியின் உறுதியுரை.-**
இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் இத்தால் உறுதிமொழிகிறேன். இவற்றில் அடங்கியுள்ள விபரங்களில் ஏதேனும் பொய்யானவை அல்லது தவறானவை எனக் காணப்படின் தெரிவுக்கு முன்னராயின் தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கும் அல்லது தெரிவின் பின்னராயின் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாவேன். மேலும் பரீட்சை நடத்துதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினது சட்டவிதிகளுக்கமைய நான் நடந்துகொள்வேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

13. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் (பொருத்தமற்றதை வெட்டிவிடவும்.) :**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .......... ..................... என்பவரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும். என்றும் அவரது கையொப்பம் எனது முன்னிலையில் .................. ஆந் திகதி இடப்பட்டது என்பதையும் அவர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டானது இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துவரது கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரது முழுப்பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
திகதி :----.

**குறிப்பு.-** வர்த்தமானப் பத்திரிகையின் 7 (V) ஆம் பந்தியில் குறிப்பிட்ட தொரு நபரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

14. **திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ..... ........................... என்பவர் இவ் அமைச்சில்/திணைக்களத்தில்/சபையில்/கூட்டுத்தாபனத்தில் கடமை புரிபவர் என்றும் அவர் மேலே குறிப்பிட்ட பதவிக்குத் தெரிவுசெய்யப்படின் அவரை விடுவிக்க முடியும்/முடியாது.

----,
திணைக்களத் தலைவரினது கையொப்பம்.
(அலுவலக முத்திரை) :

திணைக்களத் தலைவரது பெயர் :----.
பதவி :----.
சேவை நிலையத்தின் விலாசம் :----.
திகதி :----.

2-307

## உள்நாட்டலுவல்கள் அமைச்சு

### கிராம அலுவலர் III ஆம் தரத்துக்குச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - 2016

நாடு பூராகவும் உள்ள பிரதேச செயலாளர் பகுதிகளில் வெற்றிடங்கள் நிலவும் கிராம அலுவலர் பிரிவுகளில் கிராம அலுவலர்களை நியமிப்பதற்குத் தகுதியானவர்களைத் தெரிவுசெய்துகொள்வதற்காக நடாத்தப்படும் எழுத்துமூல பரீட்சைக்குத் தோற்றுவதற்காகப் பின்வரும் தகைமைகள் உள்ள ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரியொருவருக்கு 6 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தகைமை பெறும் பிரதேச செயலாளர் பகுதியில் நிலவும் வெற்றிடங்களுக்காக விண்ணப்பிக்கலாம்.

3. பிரதேச செயலாளர் பகுதிகள் மற்றும் மாவட்டங்கள் பற்றிய விபரங்கள் 1 ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. விண்ணப்பதாரர்கள் தாம் விண்ணப்பிக்கும் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் அதன் இலக்கம் என்பவற்றை அந்த அட்டவணையில் குறிப்பிட்டவாறு சரியான விண்ணப்பப்படிவத்தில் விதிக்கப்பட்ட இடத்தில் குறிப்பிடுதல் வேண்டும். அது பின்னர் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. அவ்விபரங்களைப் பிழையாகக் குறிப்பிடுதல் காரணமாக விண்ணப்பதாரரொருவருக்கு ஏற்படும் எந்தவொரு நஷ்டம் தொடர்பாகவும் விடுக்கப்படும் எந்தவொரு கோரிக்கையும் பரிசீலிக்கப்பட மாட்டாது. பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரிவு இலக்கம் குறிப்பிடப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4. **போட்டிப் பரீட்சை பற்றிய விபரங்கள் :**

4.1 ***பரீட்சை மொழிமூலம்.-*** இப்பரீட்சை சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் எனும் மொழிகளில் I ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் நடாத்தப்படும். எனினும் பரீட்சை மத்திய நிலையமொன்றைத் தாபிக்க போதுமானளவு விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்காத மாவட்டங்களிலுள்ள விண்ணப்பதாரர்கள் அருகிலுள்ள பிறிதொரு பரீட்சை மத்திய நிலையத்திற்கு அனுப்பப்படுவார்கள். விண்ணப்ப தாரர்கள் ஒரு மொழியில் மாத்திரம் தோற்றுதல் வேண்டும். விண்ணப்பிக்கப்படும் மொழி மூலம் பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

4.2 கிராம அலுவலர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான பரீட்சை கீழ்க்குறிப்பிடப்பட்ட இரு வினாப்பத்திரங்களைக் கொண்டது :-

| | | நேரம் | புள்ளிகள் |
|---|---|---|---|
| (1) | மொழியாற்றல் | 1 1/2 மணித்தியாலங்கள் | 100 |
| (2) | பொது அறிவும் உளச்சார்பும் | 1 1/2 மணித்தியாலங்கள் | 100 |

4.3 விதந்துரைக்கப்படும் பாடங்கள் :

4.3.1 *மொழியாற்றல்.-* இவ்வினாப்பத்திரம் விண்ணப்ப தாரர்களின் கருத்துத் தெரிவிப்பு, புரிந்துகொள்ளுதல், எழுத்துரு அமைப்பு, மொழியும் கட்டுரையும் வழங்கப்பட்ட கடிதமொன்றை வரைதல், வழங்கப்பட்ட பந்தியொன்றை சுருக்குதல், வழங்கப்பட்டுள்ள தரவு களின்படி விபரங்களைத் தயாரித்தல், வாக்கியங்கள்

சிலவற்றின் கருத்தைத் தனிவாக்கியத்தில் எழுதுதல், இலகுவான இலக்கணப் பயன்பாடு பற்றிய அறிவைப் பரிசீலனை செய்யும் வினாக்களைக் கொண்டது. சகல வினாக்களுக்கும் விடை அளித்தல் வேண்டும்.

4.3.2 ***பொது அறிவும் உளச்சார்பும்.***- இவ்வினாப்பத்திரம் மூலம் நாட்டின் வரலாறு, பூகோள, சமூக பொருளாதார ரீதியில் முக்கியமான தகவல்கள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு சமகாலத் தகவல்கள் பற்றிய பொது அறிவு, எண்கணிப்பு, தர்க்கிக்கும் சக்தி, பிரச்சினைகளைத் தீர்த்தல், தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றல் உட்பட பொது அறிவை அளவிடும் வகையில் தயாரிக்கப்படும் பல்தேர்வு மற்றும் சுருக்கமான விடைகளை வழங்கும் மாதிரியிலான வினாக்ககளைக் கொண்டது. எல்லா வினாக்களுக்கும் விடை அளித்தல் வேண்டும்.

4.4 விண்ணப்பதாரர்கள் எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு விடயத்திலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகள் பெறுதல் வேண்டும். எழுத்துப் பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் வரிசையின் பிரகாரம் விண்ணப்பதாரர்கள் முன்னிலைப்படுத்தப்படுகையில் ஒவ்வொரு விடயத்துக்கும் 40% அல்லது அதற்கு மேலாகப் புள்ளிகள் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் மட்டும் கவனத்திலெடுக்கப்படுவர்.

**5. சேர்த்துக்கொள்ளும் முறை :**

(i) எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்களில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவில் வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று இரு மடங்கான எண்ணிக்கையான விண்ணப்பதாரர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர். எழுத்துப் பரீட்சையிலும், கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் பெறப்பட்ட புள்ளிகளின் கூட்டுத்தொகையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுத் தகுதிபெறும் விண்ணப்பதாரர்கள் அப்பிரதேச செயலாளர் பிரிவில் வெற்றிடங்களின் எண்ணிக்கையினை நிரப்புவதற்காகப் பயிற்சி நெறியொன்றுக்குத் தெரிவுசெய்யப்படுவர்.

(ii) மேலே 5(i) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கட்டமைக்கப்பட்ட பரீட்சைக்காகப் பின்வரும் வகையில் புள்ளிகள் வழங்கப்படும்.

(அ)

| புள்ளி வழங்கப்படும் தலைப்பு | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|
| தலைமைத்துவம் | 20 |
| விளையாட்டுத் திறமை | 10 |
| மொழித்திறமைகள் (தாய்மொழி தவிர்ந்த ஏனைய மொழித் திறமைகள்) | 10 |
| கணினி அறிவு | 05 |
| நேர்முகப் பரீட்சையில் காண்பிக் கப்பட்ட திறமைகள் | 05 |
| மொத்தம் | 50 |

(ஆ) புள்ளிகள் வழங்கப்படுகையில் அரச நிறுவன மொன்றினால், திணைக்களமொன்றினால் முறை யான விதத்தில் வழங்கப்பட்ட சான்றிதழ்களும் தொடர்பான விடயத்தை உறுதிப்படுத்துவது தொடர் பாக பொறுப்புமிக்க அரசாங்கத் திணைக்களங்கள், நிறுவனங்களில் பதவி மட்டத்திலுள்ள அலுவலர் களினால் வழங்கப்பட்ட உறுதிப்படுத்தும் கடிதங்கள் மட்டுமே கவனத்தில் கொள்ளப்படும். உதாரணமாக அறநெறிப் பாடசாலை ஆசிரியர் ஒருவராகக் கடமையாற்றுதல், கிராம அபிவிருத்திச் சங்கமொன்றில் பதவி வகித்தல், விளையாட்டுக் கழகமொன்றில் பதவிகள் வகித்தல் போன்ற விடயங்கள் பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(இ) கிராம அலுவலர்களுக்கு அரசியல் உரிமைகள் இல்லையாதலால் அரசியல் மட்டத்திலான அமைப்புகளில் பதவிகள் வகிப்பது தொடர்பாகப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. உதாரணமாக பிரதேச சபைகள்/நகர சபைகளின் உறுப்பினர்கள், கூட்டுறவுச் சங்கப் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் போன்ற அரசியல் கட்சி பிரதிநிதித்துவத்தினால் பெறப்படும் பதவிகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

(iii) மூன்று மாதகாலப் பயிற்சிப் பாடநெறி மாவட்டச் செயலாளரின் மேற்பார்வையின்கீழ் நடைபெறுமென்பதுடன், அப்பயிற்சிப் பாடநெறி வெற்றிகரமாக முடிக்கப்பட்டதாக மாவட்டச் செயலாளரினால் விதந்துரைக்கப்படுபவர்கள், கிராம அலுவலர் III ஆம் தரத்துக்கு நியமிக்கப்படுவர். பயிற்சிக் காலத்துக்காக 3,000 ரூபா கொடுப்பனவு மட்டும் வழங்கப்படுவதுடன், அக்காலத்தினுள் விடுமுறை உரித்துக்கள் இருக்காது. பயிற்சிநெறி நடைபெறும் நாட்களில் 80% பங்குபற்றுதல் வேண்டும். பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் நடைபெறும் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைவதற்காக 50% புள்ளிகள் பெறப்படுதல் வேண்டும். பயிற்சிக்காலம் சேவைக்காலத்துக்குக் கணிக்கப்பட மாட்டாதென்பதுடன், அக்காலம் ஓய்வூதிய விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய ஓய்வூதியக் கணிப்புக்காக மட்டும் தொடர்புபடுத்தப்படும்.

(iv) ஒரு வெற்றிடத்துக்காக அல்லது சில வெற்றிடங்களுக்காகச் சமமான புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையானோர் உள்ளபோது அவ்வெற்றிடம் அல்லது சில வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாக என்னால் தீர்மானமெடுக்கப்படும்.

6. **விண்ணப்பதாரருக்குத் தேவையான தகைமைகள்.**- விண்ணப்ப தாரர்கள் ஆகக்குறைந்தது கீழே காட்டப்பட்டுள்ள தகைமைகளை விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி நாளில் அல்லது அதற்கு முன்னர் பூரணப் படுத்தியிருத்தல் வேண்டும் :

6.1 விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி நாளுக்கு முன்னரான முதல் ஆறு ஆண்டுகளுள் (6) விண்ணப்பதாரர்கள் தான் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கும் பிரதேச செயலாளர் பிரிவினுள் ஆகக்குறைந்தது மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாகவும் நிரந்தரமாகவும் வசித்திருத்தல் வேண்டும் என்பதுடன், அது-

(1) வாக்காளர் பெயர்ப்பட்டியல் படிவம் ; அல்லது

(2) பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

6.2 ***வயதெல்லை.***- விண்ணப்பதாரர் விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் தினத்துக்கு 21 வயதுக்குக் குறையாத மற்றும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

6.3 ***கல்வித் தகைமைகள்.*** - விண்ணப்பதாரர்களுக்குப் பின்வரும் கல்வித் தகைமைகள் இருத்தல் வேண்டும் :

(அ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் முதல் மொழியாக சிங்களம் அல்லது தமிழ் மொழி ஆகிய பாடங்களுள் ஒரு பாடத்தினையும், கணிதம் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது நான்கு (4) பாடங் களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (6) பாடங் களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் ;

அத்துடன்

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் (பொதுப் பரீட்சை மற்றும் ஆங்கில மொழி தவிர) ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல். பழைய பாடத்திட்டத்தின்கீழ் மூன்று (3) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருப்பது போதுமானது.

6.4 ***விண்ணப்பதாரர்கள் :***

(1) பிறப்பினால் அல்லது பதிவினால் இலங்கைப் பிரசை யொருவராக இருத்தல் வேண்டும் ;

(2) குற்றச் செயல் ஒன்று தொடர்பாக நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்ட ஒருவராக இருக்கக்கூடா தென்பதுடன், மிகச் சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

(3) அரசாங்க அல்லது அரச கூட்டுத்தாபன மொன்றின் அல்லது அரசாங்கத்தாபன நிறுவனமொன்றிலிருந்து சேவையிலிருந்து விலக்கப்பட்ட ஒருவர் அல்லது பதவி வறிதாக்கப்பட்ட ஒருவர் அல்லது சேவையிலிருந்து விட்டுச் சென்ற ஒருவர் அல்லது திறமையின்மை காரணமாக ஓய்வுபெறச் செய்யப்பட்ட ஒருவராக இருத்தல் கூடாது.

(4) சொத்துக்களை இழந்த ஒருவராக இருத்தல் கூடாது.

(5) ஏதும் மதமொன்றில் அல்லது மதப் பிரிவொன்றில் காவியுடை தரித்தவராக இருத்தல் கூடாது.

7. **பதவியுடன் தொடர்பான மாதாந்தச் சம்பளத்திட்டம்.**- சம்பள அளவு - ரூபா 13,990 - 10 × 145 - 11 × 170 - 6 × 240 - 14 × 320 - ரூபா 23,230.

8. **சேவை நிபந்தனைகள்** :

8.1 ஆட்சேர்த்துக் கொள்ளுதல் நடைபெறுவது கிராம அலுவலர் சேவையின் III ஆம் தரத்துக்காகும்.

8.2 பதவி நிரந்தரமானது, ஓய்வூதிய உரித்துடையது. விதவைகள் அநாதைகள்/ தபுதாரர்கள் ஓய்வூதிய நிதிக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். மூன்று மாத காலப் பயிற்சிக் காலமானது கிராம அலுவலர் சேவைக் காலத்துடன் கணிக்கப்படமாட்டாது.

8.3 முதல் நியமனத் திகதி தொடக்கம் மூன்று ஆண்டுகள் நியமிக்கப்படும் பிரதேச செயலாளர் பிரிவினுள் கட்டாயமாகச் சேவையாற்றுதல் வேண்டும்.

8.4 வாரமொன்றுக்கு ஓர் ஓய்வு தினம் உரித்தாவதுடன் அந்நாள் தவிர்ந்த வாரத்தின் ஏனைய நாட்களில் 24 மணி நேரமும் கடமைக்காக நியமிக்கப்படும் கிராம அலுவலர் பிரிவினுள் கடமைகளை நிறைவேற்றக் கட்டுப்பட்டவராவார்.

8.5 இப்பதவிக்காக நியமிக்கப்படும் ஒருவர் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில், அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினது நடைமுறை விதிகளில், தாபன விதிக்கோவையில் மற்றும் நிதிப் பிரமாணங்களில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள், பிரமாணங்களுக்கும் அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட மற்றும் எதிர்காலத்தில் விதிக்கப்படும் பிரமாணங்களுக்கும் ஏற்பாடுகளுக்கும் கட்டுப்பட்டவராவர்.

9. **விண்ணப்பப்பத்திரங்கள் அனுப்பப்பட வேண்டிய முறை.**-

9.1 மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்பத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள் 2016.03.14 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக, "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் பத்திரங்கள் அனுப்பப்படும் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "கிராம அலுவலர் III ஆந் தரத்துக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான போட்டிப் பரீட்சை - 2016" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

9.2 விண்ணப்பப்படிவம், மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் ஏ-4 அளவிலான தாளொன்றில் தலைப்பு இலக்கம் 1 முதல் 8 வரை முதற் பக்கத்திலும், எஞ்சியவற்றை அடுத்த பக்கங்களிலும் உட்படக் கூடியவிதமாக அச்சிட்டு அல்லது தட்டச்சுச் செய்து விண்ணப்பதாரரின் கையெழுத்தினால் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

9.3 விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப்பத் திரத்திலும் விண்ணப்பதாரரது கையொப்பம் உறுதிப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். எந்தவொரு நிறுவ னத்திலிருந்தும் பரீட்சைக்கு விண்ணப்பிக்கின்ற விண்ணப்ப தாரர்கள் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் மூலமும், அவ்வாறு இல்லாத விண்ணப்பதாரர்கள் தமது கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிப ரொருவர் அல்லது பிரிவிலுள்ள கிராம உத்தியோகத்தர் அல்லது சமாதான நீதவானொருவரினால் அல்லது சத்திய ஆணையாளரொருவரினால் அல்லது சட்டத்தரணி யொருவரினால் அல்லது முப்படையின் அதிகாரம் மிக்க அலுவலரொருவரினால் அல்லது ரூ. 2,40,360 அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த திரட்டிய சம்பளத்தினைப் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரச சேவையின் அல்லது நிரந்தரமான பதவிநிலைத் தரம் வகிக்கும் அலுவலரொருவரினால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

9.4 இப்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப் படிவங்களைத் தமது திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

9.5 பரீட்சைக் கட்டணமாக 500 ரூபா அறவிடப்படும். விண்ணப்பதாரியின் பெயரில் இப்பரீட்சையுடன் மட்டும் தொடர்பான அப்பணத்தை எந்த ஒரு தபால்/ உப தபால் அலுவலகத்திலும், மாவட்டச் செயலாளர் அலுவலகத்திலும் அல்லது பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு இலக்கம் 2003-02-13 இற்கு வரவு வைத்து பெறப்பட்ட பற்றுச்சீட்டை பரீட்சை விண்ணப்பப் படிவத்தில் இணைத்து இருத்தல் வேண்டும். (பற்றுச்சீட்டின் இலக்கம், திகதி மற்றும் தபால்

அலுவலகம் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்). செலுத்தப் பட்ட பரீட்சைக் கட்டணம் எந்தவொரு காரணத்தினாலும் மீள வழங்கப்படமாட்டாது என்பதுடன் இப்பரீட்சைக் கட்டணங்கள் எந்தவொரு பரீட்சைக்கும் மாற்றுவதற்கும் அனுமதிக்கப்பட மாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்மிடம் வைத்திருத்தல் பயனுடையதாக இருக்கும்.

9.6. முழுமையடையாத மற்றும் முறையற்ற விண்ணப்பங்கள் எந்தவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். உதாரணமாக 9.2 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு பொருத்தமற்ற விதத்தில் விண்ணப்பம் தயாரித்தல், வாசிக்கக் கடினமான விதத்தில், தெளிவற்ற முறையில் விண்ணப்பப்படிவத்தை நிரப்புதல், நியமனம் எதிர்பார்க்கும் பிரதேச செயலாளர் பகுதியையும், இலக்கத்தையும் சரியாகக் குறிப்பிடாமை, விண்ணப்பதாரர் கையொப்பம் இடாமை, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு ஒட்டப்படாமை போன்ற விடயங்களைக் குறிப்பிடலாம்.

10. **பரீட்சைக்குத் தோற்றுதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் :**

10.1 பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டிய துடன் அதற்காக ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது வலிதான கடவுச்சீட்டு மட்டும் ஏற்கப்படும்.

10.2 பரீட்சார்த்தியொருவர் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் உரிய சுட்டெண்ணின்கீழ் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து விண்ணப்பதாரர்களும் பரீட்சைத் தினத்தில் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரத்தை மண்டப மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். தமது அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பிக்காத பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

10.3 ***பெறுபேறுகளை வெளியிடுதல்.***- வர்த்தமானியில் 4.4 ஆம் பந்திக்கு அமைய எழுத்துமூலப் பரீட்சையில் தகைமை பெற்றவர்களது பெயர் அட்டவணை கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக பிரதேச செயலகங்களில் காணப் படுகின்ற வெற்றிடங்களது எண்ணிக்கையின் அடிப்படையில் வெவ்வேறாக செயலாளர், உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு வழங்கப்படும். நேர்முகப் பரீட்சையின் புள்ளிகள் கிடைக்கப் பெற்றதன் பின்னர் எழுத்துமூல மற்றும் நேர்முகப் பரீட்சையின் புள்ளிகளது மொத்த எண்ணிக்கையின் முன்னிலை அடிப்படையில் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் தயாரிக்கப்பட்ட பெறுபேறு அட்டவணையானது, செயலாளர், உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகளை அறிவித்தல் அல்லது www.results.exams.gov.lk இணையத்தளத்தில் உள்நாட்டலு வல்கள் அமைச்சின் செயலாளரது அறிவிப்பின் பிரகாரம் வெளியிடப்படும்.

11. எல்லாப் பரீட்சை விண்ணப்பதாரர்களும் அரசாங்க வர்த்த மானியில் வெளியிடப்பட்ட சட்டதிட்டங்கள் பற்றி அறிந்திருக்க வேண்டியதுடன் அவற்றைப் பின்பற்றுவதற்குக் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும். பரீட்சையினை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்குப் பரீட்சாத்திகள் கட்டுப்படுவர். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனையொன்றுக்கு உள்ளாவதற்குப் பரீட்சார்த்திகளுக்கு நேரிடும்.

12. விண்ணப்பதாரியொருவருக்குப் பரீட்சை அனுமதி அட்டை யொன்று வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக் கொண்டதாகக் கருதப்படமாட்டாதென்பதுடன், விண்ணப்பப்பத்திரம் தவறுகளுடன் மற்றும் முழுமையின்றிச் சமர்ப்பித்ததன் காரணமாக ஏதும் நஷ்டம் ஏற்பட்டால் விண்ணப்பதாரியே அதனைப் பொறுப்பேற்றல் வேண்டும். அவ்வாறான விடயங்கள் தொடர்பாக எத்தகைய கோரிக்கையும் பரிசீலிக்கப்பட மாட்டாது.

13. ஆட்சேர்த்துக் கொள்ளப்படுதல் நடைபெறுவது, எத்தினத்துடன் தொடர்பாக நிலவும் வெற்றிடங்கள் மீது என்பது என்னால் தீர்மானிக்கப்படுவதுடன், அவ்வாறு தீர்மானிக்கப்படும் நாளின்போது வருடாந்த இடமாற்றம் காரணமாக 1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட சில பிரதேச செயலாளர் பிரிவுகளில் வெற்றிடங்கள் நிரப்பப்பட வாய்ப்புள்ளதென விண்ணப்பதாரர்கள் கவனத்திற்கொள்ளவும். அத்தகைய பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து முன்வருகின்ற விண்ணப்பதாரர்கள் வேறு பிரதேச செயலாளர் பிரிவுகளில் நிலவும் வெற்றிடங் களுக்குகத் தகைமை பெறுவதற்கு உரிமை பெறுவதில்லையென வலியுறுத்தப்படுகின்றது.

14. வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண் டுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற முன் அனுமானத்தின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குள் விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியில் அல்லது அத்தினத்திற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி உரிய பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தொடருகின்ற மொழி மூலம், பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் இலக்கம், மாவட்டத்தின் பெயரும் இலக்கமும், விண்ணப்பதாரரது கையொப்பம் மற்றும் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் மற்றும் தேவையெனின் திணைக்களத் தலைவரது சான்றிதழுடன் சரியாக நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதுடன், அடிப்படைத் தகைமைகள் இல்லையென நேர்முகப் பரீட்சையில் அல்லது பின்னர் தெரியவந்தால் பரீட்சைப் பெறுபேறுகள் இப்பதவியைப் பெறுவதற்கான தகைமையாக கருதப்படமாட்டாது. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன் அதனைப் பற்றிக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். பரீட்சை நடாத்தப்படும் திகதிக்கு ஆகக்குறைந்தது ஐந்து (5) நாட்களுக்கு முன்னரேனும் தமது அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விதத்தில் அதனையிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளையில் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும்போது விண்ணப்பதாரர் தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை மற்றும் முகவரியை சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரர் கொழும்புக்கு வெளியிலான பிரதேச மொன்றைச் சார்ந்தவரெனின், அவ்விபரங்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றை விரைவாகப் பெற்றுக்கொள்வதற்கு இயலுமான வகையில் விண்ணப்பதாரரது தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரித்தறிதல் பொருத்தமானதாகும். அவ்வாறு விசாரிக்கும் பொது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக தம்மிடம் வைத்துக்கொண்டுள்ள விண்ணப்பப் படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் செய்த பதிவுத்தபால் பற்றுச்சீட்டு என்பவற்றை தயாராக வைத்திருப்பது பயனுடையதாகும்.

15. இவ்வர்த்தமானியில் சிங்களம், தமிழ், மற்றும் ஆங்கில மொழிகளுக்கு இடையில் ஏதும் வேறுபாடுகள் இருப்பின் சிங்கள மொழி மூல அறிவித்தல் வலிதுடையதாக இருத்தல் வேண்டும்.

16. இவ்வறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயங்கள் காணப்படின் அது தொடர்பாக தீர்மானம் எடுக்கும் உரிமை உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரைச் சாரும்.

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2016, சனவரி 28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**கிராம அலுவலர் சேவையில் III ஆந் தரத்துக்குச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - 2016**

COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO GRADE III OF GRAMA NILADHARI - 2016

1. நியமனத்துக்காக விண்ணப்பிக்கப்படும் பிரதேச செயலாளர் பிரிவின் பெயரும் இலக்கமும் :

பெயர் :----. இலக்கம் [ ][ ][ ][ ]

(I ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் உரிய பிரதேச செயலாளர் பிரிவின் பெயரும் இலக்கமும் பிழையின்றிக் குறிப்பிடப்படல் வேண்டும். அது பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

2. நியமனத்துக்காக விண்ணப்பிக்கும் பிரதேச செயலாளர் பிரிவு அமைந்துள்ள மாவட்டத்தின் பெயரும், இலக்கமும்

பெயர் :----. இலக்கம் [ ][ ]

3. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்
சிங்களம் - 2
தமிழ் - 3 மொழி மூலம் :----. இலக்கம் [ ]
ஆங்கிலம் - 4

(தொடர்பான மொழியையும் இலக்கத்தையும் குறிப்பிடவும். இதனை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.)

4. 4.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDANA)

4.2 கடைசியில் எழுதும் பெயரை முதலில் குறிப்பிட்டு ஏனைய பெயர்களது முதல் எழுத்துக்களை பின்னர் குறிப்பிட்டு பெயர் (ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : GUNAWARDANA, H. M. S. K.)

4.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

5. 5.1 நிரந்தர முகவரி (ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்) :----.

5.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

6. பெண்/ஆண் : ஆண் - 0
பெண் - 1 [ ]
(தொடர்பான இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

7. நீங்கள் இலங்கைப் பிரசையாவது :
பரம்பரையினால் - 1
பதிவினால் - 2 [ ]
(தொடர்பான இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

8. 8.1 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :
[ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

8.2 பிறந்த திகதி :-

ஆண்டு [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

8.3 2016.03.14 ஆந் திகதியன்று வயது :-

வருடங்கள் [ ][ ] மாதங்கள் [ ][ ] நாட்கள் [ ][ ]

9. நிரந்தரமாக வசிக்கும் கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் :----.
[ ][ ][ ][ ]

10. கல்வித்தகைமைகள் :

10.1 க. பொ. த. (சாதாரண தரம்) தகைமை பெற்ற பரீட்சையின் விபரங்கள் :

பரீட்சையின் பெயர் :----.
ஆண்டு :----. பரீட்சை சுட்டெண் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1 | | 6 | |
| 2 | | 7 | |
| 3 | | 8 | |
| 4 | | 9 | |
| 5 | | 10 | |

10.2 க.பொ.த. (உயர் தரம்) தகைமை பெற்ற பரீட்சையின் விபரங்கள் :

ஆண்டு:----. பரீட்சை சுட்டெண் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |

11. வேறு தகைமைகள் :----.

12. தங்களுக்கெதிராக இதற்கு முன்னர் ஏதும் ஒரு குற்றச்சாட்டு தொடர்பாக நீதிமன்றத்தின் முன்னால் வழக்குத் தொடரப்பட்டு அல்லது நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா என்பது ஆம்/இல்லை :----. ஆம் எனில்-

(i) நீதிமன்றமும் வழக்கு இலக்கமும் :----.

(ii) குற்றச் சாட்டு :----.

(iii) நீதிமன்றத் தீர்ப்பு /தண்டனை :----.

13. தாங்கள் இதற்கு முன்னர் ஏதும் ஒரு அரசாங்க அல்லது மாகாண சபையொன்றில் அல்லது கூட்டுத்தாபனமொன்றில் அல்லது அதிகார சபையொன்றில் அல்லது அரசுடன் இணைந்த நிறுவனமொன்றில் கடமையாற்றி விட்டு ஒழுக்கக் காரணங்கள் மீது சேவையில் இருந்து

விலக்கப்பட்ட அல்லது திறமையீனம் காரணமாக ஓய்வுபெறச் செய்யப்பட்ட அல்லது சேவையைக் கைவிட்டுச் சென்ற ஒருவரா என்பது ஆம்/இல்லை :----.
(ஆம் எனின் விபரங்களைத் தருக) :----.

14. **விண்ணப்பதாரியின் உறுதியுரை** :-

(அ) இவ்விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வரையில் உண்மையானவையும் பிழை யற்றவையுமாகும் என கௌரவமாகக் குறிப்பிடுகின்றேன்.

(ஆ) இவ்விண்ணப்பப்பத்திரத்தைத் தவிர, இப்பரீட்சைக்காக இவ்வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் வேறு விண்ணப்பப்பத்திரம் என்னால் சமர்ப்பிக்கப்படவில்லையென நேர்மையாகக் குறிப்பிடுகின்றேன்.

(இ) பரீட்சைக் கட்டணமாக -------- ரூபா செலுத்தப்பட்டது. பற்றுச்சீட்டு இலக்கம் --------- செலுத்தப்பட்ட தபால் அலுவலகம் -----------
திகதி-----------------

| (பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு நன்கு ஒட்டவும்) |
|---|

(ஈ) பரீட்சையினை நடாத்துவது தொடர்பாகப் பரீட்சை ஆணை யாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கீழ்ப்படிவதாகக் குறிப்பிடுகின்றேன்.

(உ) என்னால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களும், செய்யப்பட்டுள்ள பிரகடனமும் என்னை சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட முன்னர் உண்மையற்றவையென நிரூபிக்கப்பட்டால், இப்பதவிக்கு நான் தகுதியற்றவனென்றும், அப்பதவியில் நியமனம் பெற்ற பின்னர் அவ்வாறு நிரூபிக்கப்பட்டால் சேவையினை முடிவுறுத்துவதற்கு அல்லது சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு உள்ளாவேன் என நான் அறிந்துள்ளேன்.

-----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

15. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :**

இவ்விண்ணப்பத்தைச் சமர்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............... ......................... யை நான் தனிப்பட்டமுறையில் அறிவேன் என்றும் அவர் 2016/...... /..... ஆந் திகதியன்று எனது முன்னிலையில் இவ்விண்ணப்பப் படிவத்தில் கையொப்ப மிட்டாரென்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர்:----.
பதவிப் பெயர்:----
திகதி :-----.
(பதவி முத்திரையினை இடுக.)

16. திணைக்களத் தலைவர் ஊடாகச் சமர்பிக்கப்படும் விண்ணப்பங் களுக்காக:

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி................................. அமைச்சின்/ திணைக்களத்தில் ............... திகதி தொடக்கம் .................... பதவியில் கடமையாற்றுவதாகவும், அவரின் சேவை திருப்திகரமானதென்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையென்றும் உறுதிப்படுத்துகின்றேன். மேலும் அவர் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் தற்போதைய பதவியின் சேவையிலிருந்து விடுவிக்கப்பட முடியும்/முடியாதென்றும் இத்தால் கூறுகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரது கையொப்பம்
(பதவி முத்திரையுடன்).

திகதி :----.

**அட்டவணை I**

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கொழும்பு | 1103 | |
| கொலன்னாவை | 1106 | |
| கடுவெலை | 1109 | |
| ஹோமகம | 1112 | |
| ஹங்வெல்ல | 1115 | |
| பாதுக்கை | 1118 | கொழும்பு |
| மகரகமை | 1121 | |
| ஸ்ரீஜயவர்தனபுர கோட்டே | 1124 | 0 1 |
| திம்பிரிகஸ்யாய | 1127 | |
| தெஹிவளை | 1130 | |
| இரத்மலானை | 1131 | |
| மொரட்டுவை | 1133 | |
| கெஸ்பேவ | 1136 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| நீர் கொழும்பு | 1203 | |
| கட்டான | 1206 | |
| திவுலபிட்டி | 1209 | |
| மீரிகம | 1212 | |
| மினுவாங்கொட | 1215 | |
| வத்தளை | 1218 | கம்பஹா |
| ஜா-எல | 1221 | |
| கம்பஹா | 1224 | 0 2 |
| அத்தனகல்ல | 1227 | |
| தொம்பே | 1230 | |
| மஹர | 1233 | |
| களனிய | 1236 | |
| பியகம | 1239 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பாணந்துறை | 1303 | |
| பண்டாரகம | 1306 | |
| ஹொரண | 1309 | களுத்துறை |
| இங்கிரிய | 1310 | |
| புலத்சிங்ஹள | 1312 | 0 3 |
| மதுராவல | 1315 | |
| மில்லனிய | 1318 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| களுத்துறை | 1321 | |
| பேருவல | 1324 | |
| தொடங்கொட | 1327 | களுத்துறை |
| மத்துகம | 1330 | |
| அகலவத்த | 1333 | 0 3 |
| பாலிந்தநுவர | 1336 | |
| வளல்லாவிட | 1339 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| தும்பனை | 2103 | |
| பூஜாபிடிய | 2106 | |
| அக்குறணை | 2109 | |
| பாததும்பர | 2112 | |
| பன்வில | 2115 | |
| உடதும்பர | 2118 | |
| மினிப்பை | 2121 | |
| மெததும்பர | 2124 | |
| குண்டசாலை | 2127 | |
| கங்கவட கோரளை | 2130 | கண்டி |
| ஹலிஸ்பத்துவ | 2133 | |
| ஹதரலியத்த | 2134 | 0 4 |
| யடிநுவர | 2136 | |
| உடநுவர | 2139 | |
| தொலுவ | 2142 | |
| பாதஹேவாஹெட | 2145 | |
| தெல்தொட | 2148 | |
| உடபலாத | 2151 | |
| கங்கஇஹள கோரளை | 2154 | |
| பஸ்பாகே கோரளை | 2157 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கலேவெல | 2203 | |
| தம்புள்ள | 2206 | |
| நாஉள | 2209 | |
| பள்ளேபொல | 2212 | |
| யடவத்த | 2215 | மாத்தளை |
| மாத்தளை | 2218 | |
| அம்பகஹ கோரளை | 2221 | 0 5 |
| யக்கல பள்ளேகம | 2224 | |
| வில்கமுவ | 2227 | |
| ரத்தொட்ட | 2230 | |
| உக்குவல | 2233 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கொத்மலை | 2303 | |
| ஹங்குரங்கெத்த | 2306 | |
| வலப்பனை | 2309 | நுவரெலிய |
| நுவரெலிய | 2312 | |
| அம்பகமுவ | 2315 | 0 6 |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பெந்தோட்டை | 3103 | |
| பலபிட்டிய | 3106 | |
| கரந் தெனிய | 3109 | |
| எல்பிட்டி | 3112 | |
| நியாகம | 3115 | |
| தவலம | 3118 | |
| நெழுவ | 3121 | |
| நா கொடை | 3124 | |
| பத்தேகம | 3127 | காலி |
| வெலிவிடிய-திவிதுர | 3130 | |
| அம்பலாங்கொடை | 3133 | 0 7 |
| ஹிக்கடுவ | 3136 | |
| கடவத் ஸதர | 3139 | |
| போபே போத்தல | 3142 | |
| அக்மீமன | 3145 | |
| யக்களமுல்ல | 3148 | |
| இமதுவ | 3151 | |
| கோனபீனுவல | 3154 | |
| ஹபரதுவ | 3157 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பிடபத்தர | 3203 | |
| கோடபொல | 3206 | |
| பஸ்கொட | 3209 | |
| முலடியன | 3212 | |
| அதுரலிய | 3215 | |
| அகுரஸ்ஸ | 3218 | |
| வெலிப்பிட்டிய | 3221 | மாத்தறை |
| மாலிம்பட | 3224 | |
| கம்புறுப்பிடிய | 3227 | 0 8 |
| ஹக்மன | 3230 | |
| கிரிந்த புஹுல்வெல்ல | 3233 | |
| திஹகொட | 3236 | |
| வெலிகம | 3239 | |
| மாத்தறை | 3242 | |
| தெவிநுவர | 3245 | |
| திக்வெல்ல | 3248 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| சூரியவெவ | 3303 | |
| லுணுகம்வெஹெர | 3306 | |
| திஸ்ஸமகாராம | 3309 | |
| அம்பந்தோட்டை | 3312 | |
| அம்பலந்தோட்டை | 3315 | |
| அங்குனுகொலபலஸ்ஸ | 3318 | அம்பந்தோட்டை |
| வீரகெட்டிய | 3321 | |
| கடுவன | 3324 | 0 9 |
| ஓகேவெவ | 3327 | |
| பெலியத்த | 3330 | |
| தங்கல்ல | 3333 | |
| வலஸ்முல்ல | 3336 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| ஊர்காவற்துறை (தீவகம் வடக்கு) | 4103 | |
| சங்கானை(வலிகாமம் மேற்கு) | 4106 | |
| சண்டிலிப்பாய் (வலிகாமம்தென்மேற்கு) | 4109 | |
| தெல்லிப்பளை (வலிகாமம் வடக்கு) | 4112 | |
| உடுவில்(வலிகாமம் தெற்கு) | 4115 | |
| கோப்பாய்(வலிகாமம் கிழக்கு) | 4118 | |
| கரவெட்டி(வடமராட்சி) | 4121 | யாழ்ப்பாணம் |
| மருதங்கேணி (வடமராட்சி கிழக்கு) | 4124 | 1 0 |
| பருத்தித்துறை (வடமராட்சி வடக்கு) | 4127 | |
| சாவகச்சேரி (தென்மராட்சி) | 4130 | |
| நல்லூர் | 4133 | |
| யாழ்ப்பாணம் | 4136 | |
| வேலனை (தீவகம் தெற்கு) | 4139 | |
| தீவுப்பகுதி | 4142 | |
| காரைநகர் | 4145 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| மன்னார் | 4203 | |
| மாந்தை மேற்கு | 4206 | மன்னார் |
| மடு | 4209 | |
| நானட்டான் | 4212 | 1 1 |
| முசலி | 4215 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| வவுனியா வடக்கு | 4303 | வவுனியா |
| வவுனியா தெற்கு | 4306 | |
| வவுனியா | 4309 | 1 2 |
| வென்கலசெட்டிகுளம் | 4312 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| துணுக்காய் | 4403 | |
| மாந்தை கிழக்கு | 4406 | |
| புதுக்குடியிருப்பு | 4409 | முல்லைத்தீவு |
| ஒட்டுசுட்டான் | 4412 | |
| கரைதுறைப்பற்று | 4415 | 1 3 |
| வெலிஓயா | 4418 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| பச்சிளைப்பள்ளி | 4503 | |
| கண்டாவளை | 4506 | கிளிநொச்சி |
| கரைச்சி | 4509 | |
| பூநகரி | 4512 | 1 4 |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| கோரளைப்பற்று வடக்கு | 5103 | |
| கோரளைப்பற்று மேற்கு (ஓட்டமாவடி) | 5106 | |
| கோரளைப்பற்று வாழைச்சேனை | 5109 | |
| ஏறாவூர் பற்று | 5112 | |
| ஏறாவூர் நகரம் | 5115 | |
| மண்முனை வடக்கு | 5118 | மட்டக்களப்பு |
| மண்முனை மேற்கு | 5121 | |
| காத்தான்குடி | 5124 | 1 5 |
| மண்முனைப்பற்று | 5127 | |
| மண்முனை தென்மேற்கு | 5130 | |
| போரதீவுப்பற்று | 5133 | |
| மண்முனை தெற்கு | 5136 | |
| கோரளைப்பற்று தெற்கு | 5139 | |
| கோரளைப்பற்று மத்தி | 5142 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| தெகியத்த கண்டிய | 5203 | |
| பதியதலாவ | 5206 | |
| மாஓய | 5209 | |
| உகன | 5212 | |
| அம்பாறை | 5215 | |
| நாவிதன்வெளி | 5216 | |
| சம்மாந்துறை | 5218 | |
| கல்முனை தமிழ் | 5224 | |
| சாய்ந்தமருது | 5225 | |
| காரைதீவு | 5227 | அம்பாறை |
| நிந்தவூர் | 5230 | |
| அட்டாளச்சேனை | 5233 | 1 6 |
| இறக்காமம் | 5234 | |
| அக்கரைப்பற்று | 5236 | |
| ஆலையடிவேம்பு | 5239 | |
| தமன | 5242 | |
| திருக்கோவில் | 5245 | |
| பொத்துவில் | 5248 | |
| லாகுகல | 5251 | |
| கல்முனை முஸ்லிம் | 5254 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| பதவிசிறிபுற | 5303 | |
| குச்சவெளி | 5306 | |
| கோமரங்கடவெல | 5309 | |
| மொரவெவ | 5312 | |
| பட்டினமும் சூழலும் | 5315 | |
| தம்பலகாமம் | 5318 | திருகோணமலை |
| கந்தளாய் | 5321 | |
| கிண்ணியா | 5324 | 17 |
| மூதூர் | 5327 | |
| சேருவில | 5330 | |
| வெருகல ஈச்சிலம்பத்துவ | 5333 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| கிரிபாவ | 6103 | |
| கல்கமுவ | 6106 | |
| எஹத்துவெவ | 6109 | |
| அம்பன்பொல | 6112 | |
| கொடவெஹெர | 6115 | |
| ரஸ்நாயகபுர | 6118 | |
| நிகவரடிய | 6121 | |
| மஹவ | 6124 | |
| பொல்பிதிகம | 6127 | |
| இப்பாகமுவ | 6130 | |
| கணேவத்த | 6133 | |
| வாறியபொல | 6136 | |
| கொபய்கணே | 6139 | |
| பிங்கிரிய | 6142 | குருநாகல் |
| பமுணாகொடுவ | 6149 | |
| மாஸ்பொத | 6151 | 18 |
| குருநாகல் | 6154 | |
| மல்லவபிட்டிய | 6157 | |
| மாவத்தகம | 6160 | |
| ரீதிகம | 6163 | |
| வீரம்புகெதர | 6166 | |
| குளியாப்பிட்டி கிழக்கு | 6169 | |
| குளியாப்பிட்டி மேற்கு | 6172 | |
| உடுபத்தாவ | 6175 | |
| பண்ணவ | 6178 | |
| நாரம்மல | 6181 | |
| அளவ்வை | 6184 | |
| பொல்கஹவெல | 6187 | |
| பண்டுவஸ்நுவர கிழக்கு | 6190 | |
| பண்டுவஸ்நுவர மேற்கு | 6193 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| கற்பிட்டி | 6203 | |
| வனாத்தவில்லுவ | 6206 | |
| கருவலகஸ்வெவ | 6209 | |
| நவகத்தேகம | 6212 | |
| புத்தளம் | 6215 | |
| முந்தல் | 6218 | |
| மஹா கும்புக்கடவல | 6221 | புத்தளம் |
| ஆனமடுவ | 6224 | |
| பள்ளம | 6227 | 19 |
| ஆரச்சிகட்டுவ | 6230 | |
| சிலாபம் | 6233 | |
| மாதம்பை | 6236 | |
| மகாவெவ | 6239 | |
| நாத்தாண்டிய | 6242 | |
| வென்னப்புவை | 6245 | |
| தங்கொட்டுவ | 6248 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| பதவிய | 7103 | |
| கெபிதிகொல்லாவ | 7106 | |
| மதவாச்சி | 7109 | |
| மஹவிலச்சிய | 7112 | |
| மத்திய நுவரகம் பளாத | 7115 | |
| ரம்பேவ | 7118 | |
| கஹடகஸ்திகிலிய | 7121 | |
| ஹொரவபொத்தான | 7124 | |
| கலென்பிந்துனுவெவ | 7127 | |
| மிஹிந்தலை | 7130 | |
| கிழக்கு நுவரகம் பளாத | 7133 | அநுராதபுரம் |
| நாச்சியதீவு | 7136 | |
| நொச்சியாகம | 7139 | 20 |
| ராஜாங்கனை | 7142 | |
| தம்புத்தேகம | 7145 | |
| கலாவ | 7148 | |
| திரப்பனை | 7151 | |
| கெகிராவ | 7154 | |
| பளுகஸ்வெவ | 7157 | |
| இபலோகம | 7160 | |
| கல்னேவ | 7163 | |
| பலாகல | 7166 | |

| *பிரதேச செயலாளர் பிரிவு* | *பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம்* | *உரிய மாவட்டமும் இலக்கமும்* |
|---|---|---|
| ஹிங்குராங்கொட | 7203 | |
| மெதிரிகிரிய | 7206 | |
| லங்காபுர | 7209 | பொலநறுவை |
| வெலிகந்தை | 7210 | |
| திம்பலாகம | 7212 | 21 |
| தமந்கடுவ | 7215 | |
| எலஹர | 7218 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| மகியங்கனை | 8103 | |
| ரீதிமாலியத்தை | 8106 | |
| மீகஹகிவுல | 8109 | |
| கன்தகெடிய | 8112 | |
| சொர்ணதொடை | 8115 | |
| பசறை | 8118 | |
| லுனுகல | 8119 | பதுளை |
| பதுளை | 8121 | |
| ஹாலி எல | 8124 | 2 2 |
| ஊவா-பரணகம | 8127 | |
| வெலிமடை | 8130 | |
| பண்டாரவளை | 8133 | |
| எல்ல | 8136 | |
| அப்புத்தளை | 8139 | |
| ஹல்தும்முல்ல | 8142 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பிபில | 8203 | |
| மடுல்ல | 8206 | |
| மெதகம | 8209 | |
| சியம்பலாண்டுவ | 8212 | |
| மொனராகல | 8215 | மொனராகல |
| படல்கும்புர | 8218 | |
| புத்தல | 8221 | 2 3 |
| வெள்ளவாய | 8224 | |
| கதிர்காமம் | 8227 | |
| தனமல்வில | 8230 | |
| செவனகல | 8233 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| எஹலியகொடை | 9103 | |
| குருவிட்ட | 9106 | |
| கிரிஎல்ல | 9109 | |
| இரத்தினபுரி | 9112 | |
| இம்புல்பே | 9115 | |
| பலாங்கொடை | 9118 | |
| ஓபநாயக | 9121 | |
| பெல்மதுளை | 9124 | இரத்தினபுரி |
| எலபாத்த | 9127 | |
| அயகம | 9130 | 2 4 |
| கலவான | 9133 | |
| நிவிதிகல | 9136 | |
| கஹவத்த | 9139 | |
| கொடகவெல | 9142 | |
| வெலிகேபொல | 9145 | |
| எம்பிலிபிட்டிய | 9148 | |
| கொலன்ன | 9151 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| ரம்புக்கணை | 9203 | |
| மாவனல்ல | 9206 | |
| அரணாயக | 9209 | |
| கேகாலை | 9212 | |
| கலிகமுவ | 9215 | கேகாலை |
| வரகாபொல | 9218 | |
| ருவன்வெல்ல | 9221 | 2 5 |
| புளத்கொஹுபிட்டிய | 9224 | |
| எட்டியாந்தொட்டை | 9227 | |
| தெஹிவெத்தர | 9230 | |
| தெரணியகலை | 9233 | |

2-362